# அத்தியாயம் 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு


**சுதந்திரத்திற்குப் பின்னர் முதற்றடவையாக, தொடர்ந்து மூன்றாவதாண்டாக 2007இல் இலங்கையின் பொருளாதாரம் 6 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சியைப் பதிவு செய்து இலங்கை வரலாற்றின் ஆண்டுச் சராசரியான ஏறத்தாழ 4 - 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தற்பொழுது 6 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சிப் பாதைக்குள் நுழைந்திருக்கிறது.** பொருளாதாரம் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியுற, தொழிலின்மை வீதம் முன்னெப்பொழுதும் பதிவு செய்யப்படாத மிகக் குறைந்த வீதமான 6.0 சதவீதத்தினைப் பதிவு செய்துள்ள வேளையில் 2007இல் தலைக்குரிய வருமானம் ஐ.அ.டொலர் 1,617 இற்கு மேலும் உயர்வடைந்தது. தீவிரமடைந்த பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் தோன்றிய அதிகரித்த பாதுகாப்பு கரிசனைகள் மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு அச்சுறுத்தலாக விளங்கிய பன்னாட்டுச் சந்தையில் உயர்வடைந்த பெற்றோலிய மற்றும் பண்ட விலைகள் என்பனவற்றைக் கொண்ட சவால்கள் நிறைந்த சூழலொன்றில் இத்தகைய செயலாற்றம் அடையப்பட்டமை வரவேற்கத்தக்கதொன்றாகும். 2007இல் மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்து கூட்டுக் கேள்வியை குறிப்பிட்டளவிற்கு குறைவடையச் செய்தது. எனினும், இறுக்கமானதும் மிக ஒழுக்காற்று நிறைந்ததுமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள், குறிப்பாக, மத்திய வங்கியினால் பேணப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கை நிலை காணப்பட்ட போதும், வெளிநாட்டு விலை அதிர்வுகள் மற்றும் நிரம்பல்பக்க அதிர்வுகளினால் கேள்வி முகாமைத்துவ முயற்சிகள் பயனற்றுப் போனமையினை அவதானிக்கையில் அது மத்திய வங்கிக்கு ஏமாற்றம் தருவதாக இருந்தது. இவ்வெளிநாட்டு விலை அசைவுகளும் நிரம்பல்பக்க அதிர்வுகளும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவு பணவீக்கத்தினை தோற்றுவித்தது. அரசினால் பின்பற்றப்படுகின்ற இறைத்திரட்சிச் செயற்பாடு சரியான திசையில் பயணிக்கிறது. இவ்வாண்டில் அரசிறைத் திரட்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்த போதும் இறைப்பற்றாக்குறை மற்றும் அரசபடுகடன் இரண்டும் அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு இசைவாக தொடர்ந்தும் மேம்பட்டு வருகின்றன. இது,



உயர்வடைந்து செல்லும் பாதுகாப்புச் செலவினங்கள், அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்கள் மற்றும் அதிகரித்த பொருட்கள், பணிகள் செலவினை கட்டுப்படுத்த வழங்கப்பட வேண்டியிருந்த பல வரி மற்றும் தீர்வைச் சலுகைகள் போன்ற குறிப்பிடத்தக்க சவால்களை அரசாங்கம் எதிர் நோக்கியமைக்கிடையிலும் அடையப்பட்டது. அதேநேரம் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்காக, நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை விரிவாக்கும் நோக்குடன் அரசாங்கம் அதன் உயர்ந்த அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. திருத்தப்பட்ட இலக்கிலிருந்து விலகல்கள் காணப்பட்ட போதும் உள்நாட்டு வங்கித்தொழில் மூலங்களிலிருந்து பற்றாக்குறைக்கு நிதியிடுவதனை அரசாங்கம் கணிசமானளவிற்கு குறைக்கக்கூடியதாக இருந்தமை, இறுக்கமான நாணயக் கொள்கைக்கு உதவும் இறைக் கொள்கையாக இருந்தமையினால் வரவேற்கத்தக்கதொரு நிகழ்வாகக் காணப்பட்டது. சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 531 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவு செய்தமையினால் வெளிநாட்டுத்துறை வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தாக்குப் பிடிக்கும் அதன் தன்மையினை எடுத்துக் காட்டியது. மிகையான சென்மதி நிலுவை வெளிநாட்டுச் செலாவணியில் பெருமளவு உறுதிப்பாட்டினை ஏற்படுத்தியதுடன் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளையும் உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தியது. நாடு முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்தளவான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 734 மில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீட்டினைப் பெற்றமையானது தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பிக்கையினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியும் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட உறுதியான அதிகரிப்பும் இறக்குமதிகள் மீதான உயர்ந்த பெற்றோலிய மற்றும் பண்ட விலைகளின் தாக்கத்தினை ஓரளவிற்கு தணித்த வேளையில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குத் தேவைப்படும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான உயர்ந்த செலவினம் பகுதியளவு படுகடன் மற்றும் பகுதியளவு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் என்பனவற்றினூடாக நிதியிடப்பட்டது. எனினும், கடன்கள் வடிவில் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் பாரிய உட்பாய்ச்சல் ரூபாவின் உயர்வினூடாக வெளிநாட்டுப் போட்டித் தன்மைக்கும் மிகையான நாணய விரிவாக்கத்தின் மூலம் நாணய முகாமைத்துவத்திற்கும் சவால்களைத் தோற்றுவிக்கக்கூடும்.

**நிதியியல்துறை தொடர்ந்தும் வலுவான முறையில் வளர்ச்சியடைந்து வருவதுடன் சாதகமற்ற உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் உயர்வடைந்து செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்களின் பின்னணியில் நிதியியல் முறைமை தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் விளங்குகிறது.** முறையான முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள் தொடர்ச்சியான உயர்ந்த இலாபத்தன்மை, வலுவான மூலதனமயப்படுத்தல், மேம்பட்ட சொத்துக்களின் தரம், உயர்வாக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றினூடாக அவற்றின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையைப் பேணிக் கொண்டன. இவை நெருக்கடியான சூழலொன்றினை கையாளக் கூடிய அவர்களின் இயலாற்றலை திரட்சிப்படுத்தியிருக்கிறது. பல புதிய முன்மதியுடைய

வரைபடம் 1.1 பொருளாதார வளர்ச்சியும் தொழில்வாய்ப்பின்மையும்




ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலுடன் நிதியியல் முறைமையின் ஒழுங்குவிதிகளும் மேற்பார்வையும் மேலும் வலுவடைந்த வேளையில், முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் ஏறத்தாழ 100 சதவீத கிடைக்கத்தக்க விதத்திலும் பாதுகாப்பான முறையிலும் தொழிற்படுத்தப்பட்டன. இதனால், நிதியியல் முறைமைக்கு அண்மைய காலத்தில் ஏற்படக்கூடிய எந்த ஒரு இடர்நேர்வையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்குமென்பதுடன், இடர்நேர்வினைத் தணிப்பதற்கும் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை கட்டுப்படுத்துவதற்குமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் காரணமாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான தோற்றப்பாடு சாதகமானதாக காணப்படுகின்றது.

## 1.2 2007இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள்

**2007 இல் பொருளாதார வளர்ச்சி முக்கியமாக முறையே 7.6 சதவீதத்தினாலும், 7.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் செயலாற்றத்தின் மூலம் பெறப்பட்ட வேளையில் வேளாண்மைத்துறை 3.3 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தது.** பணிகள் துறை, மொத்த வளர்ச்சியில் 62 சதவீதம் கொண்ட உயர்ந்த பங்களிப்பினை வழங்கிய வேளையில் கைத்தொழில், வேளாண்மைத்துறைகள் முறையே 32 சதவீத மற்றும் 6 சதவீத பங்களிப்புக்களை வழங்கின. எனினும், பணிகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகளிலிருந்தான மொ.உ.உற்பத்தியின் பங்குகள் பெரும்பாலும் மாற்றமின்றி முறையே 60 சதவீதமாகவும் 28 சதவீதமாகவும் 12 சதவீதமாகவும் காணப்பட்டன. பணிகள் துறையில், அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல், கப்பற்சரக்கு கையாளல், போக்குவரத்து, மற்றும் நிதியியல் பணிகள் என்பன முக்கிய செயலாற்றத் துறைகளாகக் காணப்பட்டன. கட்டுமானம், ஏற்றுமதித் தயாரிப்பு மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் கைத்தொழில் துறையில்

**அட்டவணை 1.1** **நிலையான விலைகளில் கைத்தொழில்களின்படி (2002) மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ.மில்லியன்) | | மொ உ.உ.யின் பங்கின் (%) | | வீத மாற்றம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| **வேளாண்மைத்துறை,** | 257,131 | 265,586 | 12.3 | 11.9 | 6.3 | 3.3 | 10.3 | 6.0 |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில் | 235,872 | 241,010 | 11.3 | 10.8 | 3.4 | 2.2 | 5.3 | 3.6 |
| மீன்பிடித் தொழில் | 21,260 | 24,576 | 1.0 | 1.1 | 53.5 | 15.6 | 5.0 | 2.3 |
| **கைத்தொழில்துறை** | 590,298 | 635,199 | 28.2 | 28.5 | 8.1 | 7.6 | 29.8 | 31.7 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 35,769 | 42,631 | 1.7 | 1.9 | 24.2 | 19.2 | 4.7 | 4.8 |
| தயாரிப்பு | 370,355 | 394,233 | 17.7 | 17.7 | 5.5 | 6.4 | 13.1 | 16.8 |
| மின்வலு, எரிவாயு, நீர் | 52,926 | 55,339 | 2.5 | 2.5 | 14.8 | 4.6 | 4.6 | 1.7 |
| கட்டவாக்கம் | 131,248 | 142,996 | 6.3 | 6.4 | 9.2 | 9.0 | 7.4 | 8.3 |
| **பணிகள் துறைகள்** | 1,243,119 | 1,331,602 | 59.5 | 59.6 | 7.7 | 7.1 | 60.0 | 62.4 |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 514,511 | 546,145 | 24.6 | 24.5 | 7.1 | 6.1 | 22.9 | 22.3 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 9,411 | 9,199 | 0.5 | 0.4 | 2.5 | -2.3 | 0.2 | -0.1 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 259,546 | 286,779 | 12.4 | 12.8 | 12.6 | 10.5 | 19.4 | 19.2 |
| வங்கியியல், காப்புறுதி மற்றும் உண்மைச்சொத்து | 177,817 | 193,375 | 8.5 | 8.7 | 8.5 | 8.7 | 9.4 | 11.0 |
| வதிவிட உரிமை | 71,533 | 72,345 | 3.4 | 3.2 | 1.1 | 1.1 | 0.5 | 0.6 |
| அரசபணிகள் | 161,611 | 171,259 | 7.7 | 7.7 | 5.0 | 6.0 | 5.2 | 6.8 |
| தனியார் பணிகள் | 48,689 | 52,500 | 2.3 | 2.4 | 7.8 | 7.8 | 2.4 | 2.7 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 2,090,548 | 2,232,387 | 100.0 | 100.0 | 7.7 | 6.8 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருவாய் | -28,757 | -24,251 | | | -20.9 | 15.7 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | 2,061,791 | 2,208,137 | | | 7.5 | 7.1 | | |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

நன்கு செயலாற்றின. பெரும்பாலான வேளாண்மை நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களை எய்தின. எனினும், இரண்டு முக்கிய பயிர்களான தேயிலை மற்றும் நெல் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இத்துறையின் பொதுவான வளர்ச்சிச் செயலாற்றத்தினை தளர்வடையச் செய்துவிட்டது. பொருளாதார விரிவாக்கமானது கூடியளவு வேலை வாய்ப்பினை உருவாக்கி, தொழில் வாய்ப்பின்மை வீதம் 2006இன் 6.5 சதவீதத்திலிருந்து முன்னெப்பொழுதும் பதிவு செய்யப்பட்டிராத ஆகக் குறைந்த ஆண்டு தொழிலின்மை வீதமான 6.0 சதவீதத்திற்கு 2007ல் வீழ்ச்சியடைந்தது.

**2007இல் தேயிலை மற்றும் நெல் தவிர மற்றைய பெரும்பாலான வேளாண்மைத்துறையின் துணைத்துறைகள் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.** இலங்கைத் தேயிலையின் தரத்தினை அதிகரிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள், உயர் பன்னாட்டு கேள்வி மற்றும் அதிகரித்த பெறுமதி கூட்டல் என்பன உலகளாவிய சராசரி விலையிலும் பார்க்க மிக உயர்ந்த மட்டத்தில் தேயிலை விலைகள் உயர வழிவகுத்து, 2007இல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்தது. இறப்பர் உற்பத்திகள் கவர்ச்சிகரமான விலைகள் புதிய தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுவதுடன் இணைந்து நன்மைகளைப் பெற்றன. இறப்பர் துறையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பயிர்ச்செய்கைப் பரப்பினை அதிகரிப்பதற்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கூடியளவு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில், தெங்கு உற்பத்தி சாதகமான வானிலையினால் பயன் அடைந்து 3 சதவீதத்தினால் அதிகரித்தபோதிலும், செலவு கூடிய படிவு எரிபொருள்களுக்குப் பதிலாக உயிரின - எரிபொருளினை உற்பத்தி செய்வதற்கான சேதன எண்ணெய்க்கான அதிகரித்துச் செல்லும் கேள்வி தொடர்பான உலக போக்கினைப் பிரதிபலிக்கும் விதத்தில் தேங்காயினதும் தேங்காயினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளினதும் விலைகள் மிகக் கூடுதலாக அதிகரித்தன.

**உலகளாவிய சந்தைகளில் கடுமையாக உயர்வடைந்து வரும் பால்மாவின் விலைகள் காரணமாக உள்ளூர் பாற்பண்ணைக் கைத்தொழில் தோற்றம் பெற்று வரும் முக்கியமானதொரு துறையாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது.** பாற்பண்ணை வேளாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் தனியார் துறையின் உதவியுடன் தொடர்ச்சியான பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. 2008 வரவு செலவுத்திட்டம் கறவைப் பசுக்களின் இறக்குமதி, விலங்கு வளர்ப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறிய, நடுத்தர பால் பதனிடுகின்ற நிலையங்களை நிறுவுதல் என்பனவற்றிற்காக சலுகை வீதங்களில் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு முன்மொழிந்திருக்கிறது. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பாலிலிருந்தான பால் உற்பத்திகள் 2008 சனவரியிலிருந்து பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப் பட்டுள்ளன. பால் உற்பத்தித் துறையின் உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வேளையில் கிராமங்களுக்கு விலங்கு மருத்துவப் பணிகளை எடுத்துச் செல்லும் பொருட்டு விலங்கு

வைத்தியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். பிராந்திய மட்டங்களில் விலங்கு வைத்தியசாலைகள் நிறுவப்பட்ட அதே வேளை, விலங்குத்துறை சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் தேவையான சாதனங்களும் வழங்கப்பட்டன. கால் நடைகளின் தொகையினை அதிகரிக்கும் பொருட்டு பாற்பண்ணைக் கைத்தொழிலுக்காக உயர்தர கன்னிப் பசுக்களை பெற்றுக் கொள்வதற்கான கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டதுடன் கறவைப் பசுக்களை கொல்லுவதைத் தடை செய்வது தொடர்பான ஒழுங்குவிதிகள், கறவைப் பசுக்களை கொல்வது மீதான தண்டப் பணத்தினை அதிகரித்தமையின் மூலம் வலுவாக்கப்பட்டது.

**மீன் உற்பத்தி சுனாமியின் மோசமான பாதிப்பிலிருந்தும் முழுமையாக மீட்சியடைந்து, 2007இல் என்றுமில்லாத உயர்ந்த மட்டமாக 291 மில்லியன் கிலோ கிறாம்களை அடைந்து 16 சதவீதம் அதிகரித்தது.** கடல், நன்னீர் மற்றும் பண்ணை மீன் உற்பத்திகள் முறையே 17 சதவீதத்தினாலும் 9 சதவீதத்தினாலும் அதிகரித்தன. ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் மீன் விலைகள் பொதுவாக உறுதியாக இருந்தமைக்கு உயர்ந்த உற்பத்தியும், மீன் இருப்புக்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் நேரடியாகத் தலையிட்டமையும், குளிரூட்டல் வசதிகளுடன் கூடிய இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களிலும் பார வண்டிகளிலும் மீன் விநியோகிக்கப் பட்டமையும் பெருமளவிற்குக் காரணமாகும். மீன் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கும் கடல் மூல வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்தவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (சிறப்புக்குறிப்பு - 5).

**உள்நாட்டு உணவு உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் 2007இல் வேளாண்மை தொடர்பான தேசிய கொள்கையொன்றினை சமர்ப்பித்தது.** உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து பொருட்கள், பணிகளின் செலவு உயர்வினைக் கட்டுப்படுத்துவதனை கருவாகக்கொண்டு ''அபிவவமு - ரட்டநகமு'' என்ற கோட்பாட்டின் கீழ் தேசிய பிரச்சாரமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பிரச்சாரத்தின் கீழ் , வேளாண்மை உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வேளாண்மையாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தினை மாற்றல் செய்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**2007இல் கைத்தொழில் துறையின் வளர்ச்சி உத்வேகத்திற்கு தொழிற்சாலைக் கைத்தொழிலின் இயக்கவியல் ஆற்றலே முக்கிய காரணமாகும்.** ஏற்றுமதிச் சந்தைகளுக்காக பன்னாட்டு நியமங்களுக்கேற்ப உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துதல், பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் ஆகிய நோக்கில், அரசாங்கம், பிராந்திய கைத்தொழில் மயமாக்கலின் மீதும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி மீதும் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தியது. 2007ஆம் ஆண்டுப் பகுதியில் அரசாங்கம் கைத்தொழில்துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட முக்கிய முயற்சிகளாக சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமாக கைத்தொழில்களை நிறுவுதல், வேறிடங்களில் மீளவமைத்தல், விரிவாக்குதல் என்பனவற்றிற்கான தீர்வை மற்றும் சிறப்பு சலுகைகள் மற்றும் வரிச் சலுகைகள், புதிய பொருளாதார வலையங்களும் கைத்தொழில் பூங்காக்களும் நிறுவப்பட்டமை, தொழிற்பயிற்சி மற்றும் பல்கலைக்கழக பாடநெறி மூலமாக மனிதவள அபிவிருத்தி, சந்தைகளை அடையக்கூடிய தன்மையை விரிவாக்குகின்ற வசதிகள், வர்த்தக அடையாளங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் என்பன காணப்பட்டன.

**அட்டவணை 1.2**

**கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும் 2006 - 2007**

| விடயம் | ரூபா பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ...வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| 1. உள்நாட்டுக்கேள்வி | 3,262.0 | 3,946.4 | 22.1 | 21.0 | 111.0 | 110.3 |
| 1.1 நுகர்வு | 2,439.8 | 2,949.7 | 21.2 | 20.9 | 83.0 | 82.4 |
| தனியார் | 1,988.4 | 2,403.2 | 17.5 | 20.9 | 67.7 | 67.2 |
| அரசு | 451.4 | 546.5 | 40.6 | 21.1 | 15.4 | 15.3 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்) | 822.2 | 996.7 | 25.0 | 21.2 | 28.0 | 27.9 |
| தனியார் | 703.0 | 804.5 | 27.9 | 14.4 | 23.9 | 22.5 |
| அரசு | 119.2 | 192.2 | 10.0 | 61.3 | 4.1 | 5.4 |
| 2. தேறிய வெளிநாட்டுக்கேள்வி | -323.4 | -368.0 | -47.6 | -13.8 | -11.0 | -10.3 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 885.4 | 1,046.1 | 11.6 | 18.1 | 30.1 | 29.2 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,208.8 | 1,414.1 | 19.4 | 17.0 | 41.1 | 39.5 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ) (1) + (2) | 2,938.7 | 3,578.4 | 19.8 | 21.8 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1) | 498.8 | 628.7 | 13.6 | 26.0 | 17.0 | 17.6 |
| தனியார் | 569.0 | 686.4 | 13.2 | 20.6 | 19.4 | 19.2 |
| அரசு | -70.1 | -57.7 | -10.3 | 17.7 | -2.4 | -1.6 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -40.4 | -38.8 | -34.5 | 4.0 | -1.4 | -1.1 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 197.9 | 245.0 | 13.4 | 23.8 | 6.7 | 6.8 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4) + (5) + (6) | 656.3 | 834.9 | 12.5 | 27.2 | 22.3 | 23.3 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -323.4 | -368.0 | | | -11.0 | -10.3 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7) - (1.2) | -165.9 | -161.8 | | | -5.6 | -4.5 |
| 9. அலுவல்சாரா் கொடைகள் அற்ற வெளிநாட்டு நடைமுறைக கணக்குப் பற்றாக்குறை (2) + (5) + (6) | -165.9 | -161.8 | | | -5.6 | -4.5 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இதேவேளை இவ்வாண்டுக்காலத்தில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்திலிருந்தும், இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளிலிருந்தும் தைத்தொழில்துறையானது குறிப்பிடத்தக்களவு நன்மையடைந்தது. எனினும், பரஸ்பரம் கைமாற்றற்ற முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் போன்ற திட்டங்கள் பொருளாதாரமல்லாத காரணங்களுக்காக புறக்கீடு செய்யப்படக் கூடியனவையாகையால் கைத்தொழில்துறை முன்னுரிமை வசதிகளின்றியே போட்டியிடக் கூடியனவாக இருத்தல் வேண்டும் (சிறப்புக்குறிப்பு - 12).


**நாட்டின் முக்கிய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் துணைத்துறையான புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் தீர்வைச் சலுகைகளை அதிகளவில் பயன்படுத்திக் கொண்டு உயர்ந்த வெளியீட்டினைப் பதிவு செய்தது.** இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வைரம் பதப்படுத்தல், உருவமைக்கப்பட்ட உலோகம், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவிகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் போன்ற ஏனைய ஏற்றுமதிச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் 2007இல் ஆரோக்கியமான வளர்ச்சியை பதிவு செய்தன. உள்நாட்டுத் துறையில், வலுவான கேள்வியானது உணவு, குடிபானங்கள், சீமெந்து, கட்டடவாக்க மூலப் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் பி.வி.சி உற்பத்திகள் என்பனவற்றின் வெளியீட்டினை உத்வேப்படுத்தியது. வலு உருவாக்கம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், நீர்பாசன செயற்றிட்டங்கள் போன்ற அரசாங்கத்தின் பிரமாண்டமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் தனியார்துறையின் அதிகரித்த சொத்து அபிவிருத்தியினையும் உள்ளடக்கிய கட்டுமானத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சி சீமெந்து, கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகம் உட்பட உலோகமல்லா கனிப்பொருளின் உற்பத்திகளின் சிறந்த செயலாற்றத்தினை தெளிவாகப் பிரதிபலித்தது. கைத்தொழில் துறையின் செயலாற்றத்தினை மேலும் மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் மூலமும் கூடுதலான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் உற்பத்தியாக்கத்தினை உயர்த்துவது, உற்பத்திகளின் தரத்தினை பன்னாட்டு நியமங்களுக்கு மேம்படுத்தவதன் மூலம் போட்டித்தன்மையினை அதிகரித்தல், எரிபொருள் மற்றும் வலுவின் அதிகரித்துச் செல்லும் செலவினை தணிக்கும் விதத்தில் வலுச் சிக்கன உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்தல், துணைப் பொருட்களை வழங்கும் பின்புலத் தொடர்புகளை மேம்படுத்தல் மற்றும் தொழிலாளர் ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றாடல் என்பன தொடர்பாக பன்னாட்டு நியமங்களைப் பேணுதல் என்பன உட்பட குறிப்பிட்ட துறைகளை வலுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

**பணிகள் துறையிலுள்ள பெறுமதி கூட்டலின் வளர்ச்சி சாதகமற்ற பாதுகாப்பு நிலைமையினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் துணைத்துறை சுருக்கமடைந்தமை மற்றும் இறக்குமதி மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றின் காரணமாக குறைவடைந்தது.** பணிகள் துறையின் வளர்ச்சியானது ஏற்றுமதி வர்த்தகப்படுத்தல் பணிகள் மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான பணிகளின் மூலம் பெறப்பட்டமையானது ஆரோக்கியமான வெளிநாட்டுக் கேள்வியை பிரதிபலித்த வேளையில், வங்கித்தொழில் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் போன்ற உள்நாடு சார்ந்த பணிகளும் சிறந்த செயலாற்றத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்தன. 2007இல் தொலைத் தொடர்பூட்டல் துறையின் வளர்ச்சி உத்வேகத்திற்கு, உள்ளடக்கப்பட்ட பிரதேசங்கள் மேலும் விரிவடைந்தமை, முன்னேற்றங் கண்ட தொழில்நுட்பங்களின் அறிமுகம் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட பணிகள், அதிகரித்த போட்டி மற்றும் தாங்கிக் கொள்ளக் கூடியதகைமை மற்றும் உயர்ந்த முதலீடுகள் என்பன பெருமளவிற்கு உதவின. இயலளவு, தொழில்நுட்பம், உள்ளடக்கப் பரப்பு மற்றும் பணிகளின் வினைத்திறன் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக ஆண்டுகாலப்பகுதியில் பல புதிய தொலைத்தொடர்பூட்டல் செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

**உண்மையான உள்நாட்டு கூட்டுக் கேள்வியில் காணப்பட்ட மெதுவான போக்கு இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் காத்திரமான தன்மையினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.** 2007இல் உண்மை நியதிகளில் நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வி இரண்டும் 2006இன் முறையே 7.1 சதவீதம் மற்றும் 13.4 சதவீதங்களிலிருந்து 4.9 சதவீதத்திற்கும் 8.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. வீழ்ச்சியடைந்து செல்லும் உள்நாட்டு மொத்தக் கேள்வியும் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கான கேள்வியின் மெதுவான வளர்ச்சியில் பிரதிபலித்தது. இருந்த போதிலும் ஒட்டுமொத்த வளர்ச்சி மீதான மெதுவடையும் தாக்கமானது உள்நாட்டு மொத்தக் கேள்வியின் உயர்ந்தளவான வெளிநாட்டுக் கேள்வியினால் பகுதியளவு குறைக்கப்பட்டது. உண்மை நியதிகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2006ஆம் ஆண்டின் வளர்ச்சியான 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007 இல் 6.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

**2007இல் சேமிப்பு - முதலீட்டு இடைவெளி மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மேம்பட்டது.** அரசாங்கம் அதன் குறைச்சேமிப்பினை கட்டுப்படுத்தியமையின் மூலம் ஒட்டு மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களுள் உயர்வடைய உதவியது. எனினும், இன்னமும் உயர்வாகக் காணப்படும் ஏறத்தாழ 10 சதவீதம் கொண்ட உயர்ந்த உள்நாட்டு சேமிப்பு முதலீட்டு இடைவெளி, பொருளாதார வளர்ச்சியில் விரும்பத்தக்க வீதத்தினை எய்தும் பொருட்டு முதலீட்டில் தேவைப்படும் இடைவெளியினை நிரப்புவதில் வெளிநாட்டு மூலதனமும் தொழிலாளர் பணவனுப்பல் உட்பாய்ச்சல்களும் ஆற்றிய முக்கியமான பங்கினை எடுத்துக் காட்டுகிறது. மொத்த உள்நாட்டு முதலீடானது மொ.உ.உ.வின் 28 சதவீதமாக விளங்கி 2006ஆம் ஆண்டின் மட்டத்தினைப் பெரும்பாலும் ஒத்ததாகக் காணப்பட்ட வேளையில் உள்நாட்டு சேமிப்பு விகிதம் 2006இன் 17.0 சதவீதத்திலிருந்து 2007இல் 17.6 சதவீதத்திற்கு மேம்பட்டது. இறைக் கணக்கில் காணப்பட்ட குறைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் காரணமாக அரசாங்கம் குறைச் சேமிப்பினை 2.4 சதவீதத்திலிருந்து 2007இல் மொ.உ.உற்பத்தியின் 1.6 சதவீதத்திற்கு

வரைபடம் 1.2 சேமிப்புக்களும் முதலீடும்





குறைக்கக்கூடியதாக இருந்தமை உள்நாட்டு சேமிப்பு விகிதத்தில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பிற்கு பங்களித்தது. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி 2006இன் 11.0 சதவீதத்திலிருந்து 2007இல் 10.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் வடிவிலான வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களின் சேமிப்புக்கள், சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை 4.5 சதவீதத்திற்கு குறைக்க உதவின. இது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையின் மேம்பாட்டிலும் பிரதிபலிக்கப் படுகிறது. எஞ்சிய இடைவெளியானது வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல், அரசாங்கத்திற்கான கடன்கள் மற்றும் கொடைகள் மற்றும் சொத்துப்பட்டியல் உட்பாய்ச்சல் என்பனவற்றினூடாக நிதியிடப்பட்டது. உள்நாட்டுச் சேமிப்புக்கள் முதலீட்டிலும் பார்க்க விரைவான வீதத்தில் அதிகரிக்கும் போல் தோன்றாததினால் நீடித்திருக்கக்கூடிய உயர் வளர்ச்சியை எய்துவதற்கு உயர் மூலதனத் தேவைப்பாடுகள் எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக நடுத்தர காலத்தில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளி உயர்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்


**ஏற்றுமதிகள் மற்றும் பணவனுப்பல்களின் சிறந்த செயலாற்றம், உயர் மூலதன உட்பாய்ச்சல்களின் மூலம் பற்றாக்குறை நிரப்பப்பட்டமை என்பனவற்றின் உதவியுடன் 2007இல் வெளிநாட்டுத்துறை பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதல்களை வழங்கியது.** 2007இன் பெரும்பகுதியில், ஏற்றுமதி சென்றடையும் நாடுகளின் வலுவான வளர்ச்சி, உள்ளூர் தொழில் முயற்சியாளர்களினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், என்பனவற்றுடன் இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தக பங்காளர்களுக்குமிடையில் பல்வேறு வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட முன்னுரிமை வசதிகள் என்பனவற்றின் துணையுடன் முக்கியமான சந்தைகளை அதிகளவில் அடைய முடிந்தது. 2007இல் ஆடைகள், புடவைகள் மற்றும் தேயிலை போன்ற முக்கிய மூலங்களிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல், தேயிலையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியமையுடன் மேலும் அதிகரித்தது. பொறிகள் மற்றும் கருவிகள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை இறப்பர் உற்பத்திகள் வைரம் மற்றும் ஆபரணங்கள் போன்ற ஏற்றுமதிகளின் மற்றைய முக்கிய வகைகளும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இறக்குமதிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சியானது 2007இல் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்த உதவியது. 2006இன் 34 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் வர்த்தகப்பற்றாகுறை ஐ.அ.டொலர் நியதிகளில் 5.6 சதவீதத்தினால் விரிவடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மேம்பட்டது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கும் அதேபோன்று தனியார்துறையின் முதலீட்டு நடவடிக்கைக்கும் தேவையாக இருந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான அதிகரித்த செலவினமும் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தது. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த போதும் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் தகவல் தொழில்நுட்பத்தின் இயலுமைப்படுத்தப்பட்ட பணிகள் போன்ற பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் அதிகரித்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் கடுமையாக வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலா வருகைககள் ஆண்டின் பிற்பகுதியில் கணிசமாக மீட்சியடைந்தன. போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் சிறந்த முறையில் செயலாற்றியதுடன் இதற்கு கையாளப்பட்ட கப்பற் சரக்கின் உயர்ந்த அதிகரிப்பின் விளைவாக துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு சிறிலங்கன் வான் நிறுவனத்தின் பறக்கும் நாடுகளின் எண்ணிக்கை, பறக்கும் மணித்தியாலங்கள் மற்றும் பறக்கும் கால இடைவெளி என்பன விரிவடைந்தமையின் காரணமாக பயணிகளின் கட்டணங்களிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.

**தொழிலாளர் பணவனுப்பல்கள் உட்பாய்ச்சல்களின் முக்கிய மூலமாக தொடர்ந்தும் விளங்கி 2007இன் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 70 சதவீதத்தினை நிதியிட்டன.** தொடர்ந்து மூன்றாவதாண்டாக உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2007இல்

வரைபடம் 1.3 பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலையும்



வரைபடம் 1.4 சென்மதி நிலுவை




ஐ.அ.டொலர் 2,502 மில்லியன்களை அடைந்தது. பணிகள் கணக்கின் மிகை தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுடன் சேர்ந்து நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்த உதவியது. இது 2006இன் 5.3 சதவீதத்திலிருந்து 2007இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 4.2 சதவீதத்திற்கு மேம்பட்டது.

**உயர்ந்த உட்பாய்ச்சல்களின் காரணமாக மூலதன மற்றும் நிதியியல் கணக்கு மேம்பாடொன்றினைப் பதிவு செய்தது.** அபிவிருத்திப் பங்காளர்களிடமிருநதான அரசாங்கத்திற்கான பெரும்பாலும் மூலதன தன்மைகளைக் கொண்ட கொடைகளைப் பதிவு செய்யும் மூலதனக்கணக்கு பெரும்பாலும் 2006இல் பெறப்பட்ட அதேமட்ட உதவிகளைப் பெற்றது. முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 604 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 734 மில்லியன் கொண்ட சாதனை மட்டமொன்றினை அடைந்தமைக்கு, குறிப்பாக பணிகள் துறையில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபையின் ஏற்கனவேயுள்ள கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீட்டில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். அரசாங்கத்திற்கான நீண்ட கால மற்றும் நடுத்தரகால கடன்களின் உட்பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 932 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,290 மில்லியனுக்கு அதிகரித்தது. முதலாவது பன்னாட்டு முறிவழங்கல் மற்றும் வெளிநின்ற திறைசேரி முறிகளின் இருப்பில் 10 சதவீதம் வரையானவற்றை வதிவற்றோருக்கு திறந்துவிட்டமை என்பன அரசிற்கான உயர்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சலுக்கு பங்களித்தன. துணை வாடிக்கையாளர் பிரச்சனை காரணமாக உலகளாவிய ரீதியில் பங்குச்சந்தையில் குழப்ப நிலைமைகள் ஏற்பட்ட போதும் கொழும்பு பங்குச் சந்தை மொத்த மற்றும் தேறிய அடிப்படைகள் இரண்டின் மீதும் கூடியளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்ந்து இலங்கை மீது முதலீட்டாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதாக இருந்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் நிதியியல் கணக்கு 2006இன் ஐ.அ.டொலர் 1,517 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 1,828 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவு செய்தது. இதன் விளைவாக, மூலதன மற்றும் நிதியியல்

அட்டவணை 1.3 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

| விடயம் | ஐ.அ.டொ மில் 2006 | ஐ.அ.டொ மில் 2007 (அ) | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | 6,883 | 7,740 | 12.5 |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,293 | 1,507 | 16.6 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 5,401 | 5,920 | 9.6 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 120 | 129 | 7.7 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 69 | 184 | 166.2 |
| **இறக்குமதிகள்** | 10,254 | 11,301 | 10.2 |
| நுகர்வுப் பொருட்கள் | 1,980 | 2,002 | 1.1 |
| இடைநிலைப் பொருட்கள் | 5,962 | 6,513 | 9.2 |
| முதலீட்டுப் பொருட்கள் | 2,246 | 2,685 | 19.6 |
| ஏனையவை | 65 | 100 | 53.2 |
| ***வர்த்தக நிலுவை*** | *-3,371* | *-3,560* | *5.6* |
| **பணிகள், தேறிய** | 257 | 239 | -7.0 |
| பெறுகைகள் | 1,625 | 1,711 | 5.3 |
| கொடுப்பனவுகள் | 1,368 | 1,473 | 7.6 |
| **வருமானம், தேறிய** | -389 | -358 | -7.9 |
| பெறுகைகள் | 311 | 449 | 44.3 |
| கொடுப்பனவுகள் | 700 | 807 | 15.3 |
| **தனியார் நடைமுறை மாற்றல்கள், தேறிய** | 2,005 | 2,311 | 15.3 |
| தனியார் பணவனுப்பல், தேறிய | 1,904 | 2,214 | 16.3 |
| பெறுகைகள் | 2,161 | 2,502 | 15.8 |
| கொடுப்பனவுகள் | 257 | 288 | 11.9 |
| உத்தியோகபூர்வ மாற்றல்கள், தேறிய | 101 | 97 | -4.0 |
| **நடைமுறைக் கணக்கு நிலுவை** | *-1,499* | *-1,369* | *-8.7* |
| **மூலதனக் கணக்கு** | *291* | *269* | *-7.4* |
| **நிதியியல் கணக்கு** | *1,517* | *1,828* | *20.5* |
| நேரடி முதலீடு, தேறிய | 451 | 548 | 21.6 |
| உட்பாய்ச்சல்கள் | 480 | 603 | 25.6 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 29 | 55 | 87.1 |
| தனியார் நீண்டகால, தேறிய | -35 | 31 | -188.6 |
| உட்பாய்ச்சல்கள் | 139 | 199 | 43.3 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 174 | 168 | -3.4 |
| அரச நீண்டகால, தேறிய | 491 | 672 | 36.9 |
| உட்பாய்ச்சல்கள் | 932 | 1,290 | ·38.4 |
| சுனாமி தொடர்பான உட்பாய்ச்சல்கள் | 441 | 618 | 40.1 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 0 | 372 | |
| குறுங்கால: | 610 | 205 | -66.4 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு, தேறிய | 51 | 101 | 99.2 |
| தவறுகளும் விடுபாடுகளும் | -105 | -198 | |
| **மொத்த நிலுவை** | 204 | 531 | |
| அரசுசார் மொத்த ஒதுக்குகள் (ஆதீஒஇல்லாமல்) | 2,526 | 3,063 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 3.0 | 3.3 | |
| மொத்த ஒதுக்குகள் (ஆதீஒஇல்லாமல்) | 3,695 | 4,511 | |
| மாதத்திற்கான இறக்குமதிகள் | 4.3 | 4.8 | |
| படுகடன்களுக்கான சட்ட இசைவுத் தாமதம் | 103.3 | 108.3 | |
| ஏற்றுமதி விலைகள் | 107.0 | 113.3 | |
| இறக்குமதி விலைகள் | 96.6 | 95.6 | |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+), தேய்வு(-) |
| ரூ. / ஐ.அ.டொ | 103.96 | 110.62 | -6.0 |
| ரூ. / யென் | 0.89 | 0.94 | -5.0 |
| ரூ. / யூரோ | 130.63 | 151.63 | -13.8 |
| ரூ. / ஸ்டேர்லிங் பவுண் | 191.53 | 221.46 | -13.5 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கணக்குகளில் ஏற்பட்ட இணைந்த மிகை கணிசமாக அதிகரித்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடத் தேவையான அளவிற்கும் கூடுதலானதாக விளங்கி திரண்ட சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 531 மில்லியன் கொண்ட மிகையினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, நாட்டின் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவிற்கு வசதியானதொரு மட்டத்திற்கு மேம்பட்டு 3 மாதங்களுக்கும் கூடுதலான இறக்குமதிகளுக்கு

நிதியிடப் போதுமானதாக விளங்கியதன் மூலம் அதிர்வுகளுக்கு வெளிநாட்டுத்துறை தாக்குப் பிடிக்கக்கூடிய தன்மை மேம்பட்டது.

**அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, நாட்டின் மொத்த வெளிநாட்டுப்படுகடன் 2006இன் 43.3 சதவீதத்திலிருந்து 2007இல் 44.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு உள்நாட்டு வட்டி வீதங்கள் அதிகரித்துச் செல்லுகின்ற சூழலொன்றில் அரசாங்கம் அதன் பற்றாக்குறையை நிதியிட வெளிநாட்டு மூலங்களில் பெருமளவிற்கு தங்கியிருந்தமையே காரணமாகும்.** இவ்வுபாயம் உள்நாட்டு மூலவளங்கள் மீதான அழுத்தத்தினைக் குறைவடையச் செய்து, தனியார் துறைக்கு மூலவளங்களை விடுவித்ததுடன் ஆண்டின் இறுதியில் உள்நாட்டு வட்டி வீதங்கள் உறுதியடையவும் உதவியது. எனினும், படுகடன் மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு அரச வெளிநாட்டுப்படுகடனில் அண்மைய சாதகமான போக்குகளைப் பேணுவது முக்கியமானதாகும்.

**மிதக்கும் செலாவணிவீத அமைப்பின் கீழ், இலங்கை ரூபாவினை இனிமேலும் தேய்வடைந்து செல்கின்ற நாணயமாக கருதமுடியாது.** முதிர்ச்சியடைகின்ற உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச்சந்தையின் காரணமாக தற்பொழுது செலாவணி வீதங்கள் நிரம்பல் மற்றும் கேள்வி சந்தைவிசைகளினூடாக நிர்ணயிக்கப்படுவதில் கூடியளவிற்கு இசைவானதாக விளங்குகின்ற அதேவேளையில், மத்திய வங்கியின் தலையீடு சந்தையில் மிகையான தளம்பல்களைத் தணிப்பதற்கும் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் ஐ.அ.டொலருக்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்த ரூபா, நாட்டின் முதலாவது பன்னாட்டு முறிவழங்கலிலிருந்து கிடைத்த பெறுகைகளின் உட்பாய்ச்சல்களுடன் இறுதிக்காலாண்டில் உயர்வடைந்ததுடன் 2007 இறுதியில் 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு தேய்வினைப் பதிவு செய்தது. இலங்கை ரூபா, சந்தையில் உறுதிப்பாடடைந்தமையானது, ஏற்றுமதி, இறக்குமதி, போட்டித்துறைகள், வெளிநாட்டு போட்டித்தன்மைகளைப் பேணுவதன் பொருட்டு உற்பத்தியாக்க முன்னேற்றங்களிலும் சந்தையை அடையும் வழிவகையிலும் கூடியளவிற்கு கவனம் செலுத்த வேண்டிய தேவையினை வலியுறுத்துகிறது.


**2007 ஒத்தோபரில் இலங்கை ஐ.அ.டொலர் 500 மில்லியன் அடிப்படை அளவான அதன் முதலாவது பன்னாட்டு முறிவழங்கலை வெற்றிகரமாக நிறைவு செய்தது.** துணை வாடிக்கையாளர் பிரச்சனையின் தாக்கத்தின் காரணமாக உலகளாவிய நிதியியல் சந்தைகள் குழப்ப நிலையொன்றில் காணப்பட்ட வேளையில் வழங்கப்பட்ட முறி வெற்றி பெறுவதற்கு நாட்டின் ஆற்றல் மிக்க பொருளாதார அடிப்படைகள், தூண்டுதலளிக்கும் முதலீட்டு சூழல், எதிர்கால வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளம், கறைபடியாத படுகடன் கொடுப்பனவு பதிவுகள் என்பன முக்கியமான பங்கொன்றினை ஆற்றின. முறிவழங்கலின் காரணமாக உலகளாவிய நிதியியல் சந்தையில் இலங்கை அதன் பிரசன்னத்தை அடையாளப்படுத்திக் கொண்டதுடன் சந்தையை அணுகக்கூடிய அதன் தன்மையினையும் உயர்த்திக் கொண்டது. மத்தியதர வருமான அந்தஸ்தினை இலங்கை அடைந்தவுடன் வழமையான அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்தான சலுகை ரீதியான நிதியினை இலங்கை பெறுவது வீழ்ச்சியடைந்து செல்வதனை கருத்திற் கொள்கையில் இது குறிப்பாக பயன்மிக்கதாக இருக்கும். இப்பொழுது உலகளாவிய முதலீட்டாளர் சமூகமும் பன்னாட்டு தரமிடல் முகவர்களும் இலங்கையின் பேரண்ட பொருளாதார அபிவிருத்திகளை (சிறப்புக் குறிப்பு - 15) மிக நெருக்கமாகக் கண்காணித்து வருவதனால் இம்முறிவழங்கலானது சுயமாகவே பேரண்ட பொருளாதார ஒழுக்காற்று ஒன்றினை ஏற்படுத்தியிருக்கிறது.

## இறைத்துறை அபிவிருத்திகள்

**அரசாங்கத்தின் இறை உபாயமானது, அரசாங்கத்தின் இறைக்கொள்கை கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்ட கொள்கை ஆவணமான *"பத்தாண்டு தொலைநோக்கில்"* தெளிவுபடுத்தப்பட்ட திசையில் தொடர்ந்தும் பயணித்தது.** உயர்ந்ததும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துகின்ற அதேவேளையில் இறைத்தொழிற்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் இறைக்கொள்கை வடிவமைக்கப் பட்டிருக்கிறது. இறை இலக்குகள் தேசிய பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான பயங்கரவாதத்திற்கெதிரான வழிமுறைகளை உயர்த்துவதற்கான தேவை, ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பணவீக்கம் மற்றும் பணவீக்க அழுத்தங்கள், விரைவாக உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு பண்ட மற்றும் எண்ணெய் விலைகள் மற்றும் கடுமையாக உயர்வடைகின்ற உள்நாட்டு வட்டி வீதங்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இவ்விறை இலக்குகள் அடையப்பட்டன. இச்சவால்கள் 2007 வரவு செலவுத்திட்டத்தின் முக்கியமான எடுகோள்களுடன் இணைந்த காரணிகளினால் விலகல்களைத் தோற்றுவித்ததன் மூலம் இலக்கிடப்பட்ட பெறுபேறுகளைப் பாதித்தன. இம்மோசமான போக்குகள் காணப்பட்டதற்கிடையிலும் இறைத்துறை அதன் மேம்பட்ட போக்கினைத் தொடர்ந்ததெனினும் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவான வேகத்தினையே கொண்டிருந்தது. இம்முன்னேற்றங்கள் காணப்பட்டதற்கிடையிலும், அரசிறைச் சேகரிப்பின் வீழ்ச்சி, அளவுக்கு மீறிய மீண்டெழும் செலவினம், அரச மூலதன நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தமை, முக்கிய அரச வர்த்தக தொழில் முயற்சிகள் மற்றும் அரசுடைமைத் தொழில் முயற்சிகளின் பலயீனமான நிதியியல் செயலாற்றம் போன்ற பின்னடைவுகளினால் இத்துறை இன்னமும் பாதிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இறைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதனை நோக்கி தீவிரமாக விரைவான வேகத்தில் செயற்பட வேண்டியதும் படுகடன் முகாமைத்துவ செயற்பாட்டினை மேலும் வலுப்படுத்த வேண்டியதும் அவசியமானதாகவுள்ளது.


**2007இல் மொத்த அரசிறை பெயரளவுப் பெறுமதி அடிப்படையில் 2006 உடன் ஒப்பிடுகையில் 18.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பிற்கு, வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் விலகல்கள் ஒழுங்குமுறைப்படு-

**வரைபடம் 1.5 அரசிறை, செலவினம், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை**




த்தப்பட்டமை, வரி இணங்குவிப்புக்களை உயர்த்தியமை மற்றும் நடைமுறைப் படுத்தல்களை வலுவூட்டியமை போன்றன காரணங்களாக அமைந்தன. எனினும், உயர்வடைந்து செல்லும் பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளைத் தணிப்பதற்காக வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய பண்டங்கள் மீதான வரிச்சலுகை ஏற்பாடுகள், உயர்வடைந்து செல்லும் எண்ணெய் விலைகளின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துகின்றதொரு வழிமுறையாக எரிபொருள் சிக்கனமற்ற ஊர்திகள் மீது பேணப்பட்ட உயர்ந்த இறக்குமதித் தீர்வை அமைப்பின் காரணமாக குறைந்த பெறுமதி கொண்ட உந்து ஊர்திகளை இறக்குமதி செய்ய மக்கள் விரும்பியமையினால் 2007இல் ஊர்தி இறக்குமதிகளின் அளவும் மொத்தப் பெறுமதியும் குறைவாக இருந்தமை என்பனவற்றின் முக்கிய காரணமாக மொத்த அரசிறை வரவு செலவுத்திட்ட இலக்குகளிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்டது. இவ்விரு காரணங்களினால் மாத்திரம் ஏற்பட்ட அரசிறை இழப்பு ரூ. 24 பில்லியனாக (மொ.உ.உற்பத்தியில் 0.7 சதவீதம்) இருக்குமென மதிப்பிடப்பட்டது. மொத்த அரசிறை முன்னைய ஆண்டின் 16.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் மொ.உ.உற்பத்தியின் 15.8 சதவீதமாக விளங்கியது. அரச முதலீடு 2006இன் 6.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதமாகக் காணப்பட்டது. பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களையும், கிராமிய

**வரைபடம் 1.6 மொ.உ.உ. யின் சதவீதமாக அரசபடுகடன்**




அபிவிருத்தி முனைவுகளையும் முக்கியமாகக் கொண்ட பொருளாதார சமூக உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டமை இம்மேம்பாட்டிற்குப் பங்களித்தது. இருபபினும் அடையப்பட்ட அரசு முதலீட்டு விகிதமானது ஆரம்ப இலக்கான மொ.உ.உ. யின் 8.6 சதவீதத்தினை விட அதிகம் குறைவாக இருந்தது. தேசிய பாதுகாப்பு, சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பன மீதான செலவினம் திட்டமிடப்பட்டதனைவிட உயர்வாக இருந்தமையின் காரணமாக மீண்டெழும் செலவினம் இலக்கினை விஞ்சிக் காணப்பட்டது. இவ்வபிவிருத்திகளின் இணைந்த விளைவாக, 2007இல் திரண்ட பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 7.7 சதவீதமாக விளங்கி ஆரம்ப இலக்கான 8.4 சதவீதத்துடனும் 2006 ஆம் ஆண்டின் பற்றாக்குறையான 8.0 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**2007இல், பற்றாக்குறை நிதியிடல் தேர்வினை பன்முகப்படுத்துவதனை நோக்கிய தொடர்ச்சியான முயற்சிகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுகின்ற மூலங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்பட்டன.** இத்தகைய பின்னணியில் அரசாங்கத்தினால் மிக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிதியிடல் கருவியாக 2007இன் முதலாவது பன்னாட்டு முறிவழங்கல் காணப்பட்டது. உயர்வடைந்தும் தளம்பல்களுக்கு உட்பட்டிருக்கின்றதுமான உள்நாட்டு சந்தை வட்டி வீதங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அரசாங்கம் கூடியளவிற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கு மாறுவதற்கு விருப்பம் கொண்டிருந்தது. எனினும், கூடுதலான வெளிநாட்டுக் கடன்பாடுகள் செலாவணிவீத இடர்நேர்வுகளுக்கு படுகடன் இருப்புக்கள் உள்ளாகக் கூடியதன்மையினை அதிகரிக்கக்கூடும். இதனை முன்மதியுடன் கட்டுப்படுத்துதல் அவசியமாகும். 2007இன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் பெருந்தொகை வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. இதன் விளைவாக உள்நாட்டு மூலங்களிலிருந்தான நிதியிடல் வரவு செலவுத்திட்டமிடல் மட்டத்திற்கும் கீழாக வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் முறையிலிருந்தான கடன்பாடுகள் ஆரம்ப இலக்கிலும் பார்க்க சிறிதளவு குறைவாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. முதலாவது பன்னாட்டு முறி வழங்கலும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளும் 2007இல் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவிற்கு வங்கி நிதியிடல் நாடப்பட்டமைக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற படுகடனில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2007இல் தொடர்ந்ததுடன் 2006இன் 88.7 சதவீதத்திலிருந்து 85.8 சதவீதத்தினை அடைந்து பொதுப்படுகடனின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தியது.** இதற்கு 2007இன் இறுதியில் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா உறுதிப்பாடடைந்திருந்தமையும், பெயரளவு பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநின்ற படுகடனின் வளர்ச்சி மெதுவாகக் காணப்பட்டமையும் முக்கிய காரணங்களாக

இருந்தன. பெயரளவு நியதிகளில், வெளிநின்ற படுகடன் 2007இல் ரூ.3,070 பில்லியனுக்கு ரூ.462 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, படுகடன் பணிக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. அரசின் இறைத் தொழிற்பாடுகள் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டினை சுமூகமாக்குவது அவசியமானதாகும். வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தகக் கடன்களில் மீள்கொடுப்பனவுகளின் பெரும் தொகையினை ஒரே நேரத்தில் கொடுப்பனவு செய்யும் மீள் கொடுப்பனவு முறையினை தவிர்க்கும் பொருட்டு அவற்றின் முதிர்ச்சியமைப்பினையும் நீடிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

**2007இல் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும், இறைத்துறை பல்வேறு நலிவுகளினால் இன்னமும் பாதிக்கப்படுகின்றமை மேலும் மேம்பாடுகளை அடைவதனை நோக்கி தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையினை தெளிவாகக் காட்டியது.** அரசிறையின் வீழ்ச்சி மற்றும் அளவுக்கதிகமான மீண்டெழும் செலவினமும், மேலதிக நிதித் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கு கடன்படுவதற்கு அரசாங்கத்தினை இட்டுச் சென்றதன் மூலம் எதிர்கால வட்டிச் செலவுகளிலும் படுகடன் இருப்பிலும் அதிகரிப்புக்களை தோற்றுவிக்கின்றன. இவ்வாண்டுக்காலத்தில் இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான வழிமுறைகளை அறிமுகப்படுத்தினாலொழிய 2007இல் அரசிறைச் சேகரிப்பில் காணப்பட்ட வீழ்ச்சி 2008இற்கான அரசிறை இலக்கினை எய்துவதில் இடர்நேர்வுகளை தோற்றுவிக்கும். இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு மேல் மிக அதிகமாக மீண்டெழும் செலவினம் அதிகரிப்பது அரச முதலீடுகளுக்கு கிடைக்கத்தக்க தாகவுள்ள மூலவளங்களைக் குறைத்துவிடுமாகையால் நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளர்ச்சிக்கு தடையாக அமையும். அத்தகைய செலவினத்துடன் தொடர்புபட்டுள்ள அமையச் செலவு, எதிர்காலத்தில் மூலதன முதலீட்டிலிருந்து நாடு பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளின் நியதிகளில் மிக உயர்வானதாக இருக்கிறது. மேலும், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் மெதுவான செயலாற்றம் செலவுகள் உயர்வடைய வழிவகுத்து, அவ்வாறு தாமதடைந்த உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு உயர்ந்தளவு மூலவளங்களைத் தேவைப்படுத்தும். அதேவேளை அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் சிலவற்றின் நிதியியல் ஆற்றலும் செயலாற்றமும் கரிசனைக்குரியவைகளாகவுள்ளன.

**அரசாங்கம், *பத்தாண்டு தொலைநோக்கு மற்றும் நடுத்தரகால பேரண்ட இறைக்கட்டமைப்பு: 2007 - 2010* என்பன உள்ளிட்ட அதன் கொள்கை ஆவணத்தில், மேற்குறிப்பிட்ட பலயீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான கடப்பாடுகளை ஏற்கனவே அறிவித்திருக்கிறது.** இது இறைக்கூட்டுக்கள் உறுதியற்றதொரு மட்டத்திற்கு உயர்வதன் தாக்கங்களை அரசாங்கம் மனதில் கொண்டுள்ளதென்பதனை தெளிவுபடுத்துகின்றது. இதற்கமைய வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை உறுதியானதொரு மட்டத்தில் கட்டுப்படுத்துவது முன்னுரிமையினைப் பெற்றுள்ளதுடன், இது முழு இறைச் செயலாற்றத்தினதும் நடுநாயகமாகவும் கருப்படுகிறது. இறைப்பக்கத்தில், இலக்குகளிலிருந்து விலகுவது நாட்டின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் பல்வேறு மோசமான தன்மைகளை உருவாக்குமாகையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு திட்டமிடப்பட்டதும் மேலதிகமானதுமான வழிமுறைகளை உரிய நேரத்தில் நடைமுறைக்கிடுவது இன்றியமையாததாகும். குறிப்பாக, அவை நாணய முகாமைத்துவத்தினை மிகக் கடினமாக்குகின்ற அதேவேளையில், உறுதியான அடிப்படையில் வறுமையினையும் பிரதேச பொருளாதார வேறுபாடுகளையும் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டு எதிர்பார்க்கப்படும் உறுதியுடன் கூடிய உயர்ந்த வலுவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கும்.

## நாணயத்துறை அபிவிருத்திகள்


**2007இல் மத்திய வங்கி உயர்வடைந்து செல்லும் பணவீக்க அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினை மேலும் வலுப்படுத்தியது.** 2007இல் இறுக்கமான நாணயக் கூட்டுக்களின் அளவுசார் இலக்குகளுக்கு மேற்படாத விதத்தில் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் உபாயம் மிகக் கூடுதலாக இயக்கப்பட்டு மிகையான கேள்வியை கட்டுப்படுத்தும் பொருட்டு சந்தை வட்டி வீதங்கள் மேல் நோக்கிச் சீராக்கப்படும் விதத்தில் அனுமதிக்கப்பட்டன. ஆண்டின் தொடக்கத்தில், மத்திய வங்கி 2007ஆம் ஆண்டிற்கான அதன் நாணயக் கொள்கை குறிக்கோள்கள், உபாயம் மற்றும் இலக்குகளை "2007ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டல்" இல் அறிவித்தது. 2007இல் எதிர்பார்க்கப்பட்ட பேரண்ட பொருளாதார அபிவிருத்திகளுக்குப் புறம்பாக, 2007ஆம் ஆண்டிற்கான நாணய இலக்குகளை நிர்ணயிக்கையில் 2006இல் நிலவிய உயர்ந்த நாணய விரிவாக்கமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, இவ்வாண்டிற்காக இறுக்கமான நாணயக் கொள்கை இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதுடன், இவற்றினை அடைவதற்காக வலுவான வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. கொள்கை வட்டி வீதங்கள், அதாவது, மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 2007இன் தொடக்கப் பகுதியில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்தப்பட்டன. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீவிரமாக நடத்தப்பட்ட வேளையில், மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளைப் பயன்படுத்துவதன் மீது வங்கிகளுக்கு குறிப்பிட்ட சில வரையறைகள் விதிக்கப்பட்டதன் மூலம் வங்கிகளின் கொடுகடன் உருவாக்க இயலளவு நேரடியாகக் கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், மிகையான கொடுகடன் உருவாக்கத்திலிருந்து வங்கிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்காக தார்மீக ஒழுக்காற்று முறைகளும் பயன்படுத்தப்பட்ட வேளையில், ஆரோக்கியமற்ற கொடுகடன் விரிவாக்கத்திலிருந்து வங்கிகளைப் பாதுகாத்து கொள்வதற்காக 2006இல் அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய வழிமுறைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. 2004 இறுதியிலிருந்து கொள்கை

வீதங்கள் 350 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தமை நீண்டகால தாமதத்துடன் நாணய விரிவாக்கத்தின் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும் போல் தோன்றியமையினால் பரிமாற்றல் செயல்முறையினை விரைந்து மேற்கொள்வதற்காக கணிய ரீதியான இலக்கிடல் மீது அதிக கவனம் செலுத்தப்படும் அணுகுமுறை பின்பற்றப்பட்டது.

**இலக்குகளுக்கெதிராக பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்காக புதிய கண்காணிப்பு பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் செயற்பாடு மேலும் வலுப்படுத்தப்பட்டது.** நாணயக் கொள்கை இலக்குகளின் மீது தாக்கத்தினைக் கொண்டுள்ள முக்கியமான பேரண்டப் பொருளாதார மாறிகள் அடையாளம் காணப்பட்டதுடன் அவற்றின் அபிவிருத்தியைக் கண்காணிப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய பொறிமுறையொன்று 2007இன் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பொறி முறையானது, கொள்கை மாறிகளின் விலகல்கள் ஏதுமிருப்பின் அதனை முன்கூட்டியே கண்டறிவதற்கு மத்திய வங்கிக்கு உதவுவதுடன் நேரகாலத்துடன் அவற்றை திருத்திக் கொள்வதற்கான விதந்துரைப்புக்களையும் செய்கிறது. நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டினை வலுவுறச் செய்வதற்காக தனியார்துறை மற்றும் கல்விமான்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவர்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய பல்வேறு ஆர்வலர்களைக் கொண்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவொன்று நிறுவப்பட்டது.

**கணியம்சார் இலக்கிடல் அணுகுமுறையில் கூடியளவு கவனத்தைக் கொண்ட நாணய கொள்கை உபாயம் நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் கூடியளவு தாக்கமிக்கதாக விளங்கி கேள்வியினால் தூண்டப்படும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தியது.** ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியானது இலக்குகளுக்குள் சிறப்பான முறையில் 10.2 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டதுடன், கடந்த ஐந்தாண்டுகளில் ஆகக் குறைந்த வளர்ச்சி வீதமாகும். கட்டுப்படுத்தப்பட்டது. இது, 2006இல் காணப்பட்ட மிகையான ஒதுக்குப் பண விரிவாக்கத்தின் தாக்கத்தினை கூடியளவு


வரைபடம் 1.8 வட்டிவீத அசைவுகள்




முழுமையாக சமப்படுத்துவதற்கு உதவியது. பெயரளவு மொ.உ.உற்பத்தியின் 21.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஒதுக்குப் பண விரிவாக்கம் உயர்ந்தளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, விரிந்த பணத்தின் வளர்ச்சியும் குறைவடைந்தது. எனினும், நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கும் மேலாகவே காணப்பட்டது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் இரண்டும் அதிகரித்து, 2007இன் விரிந்த பணத்தின் விரிவாக்கத்திற்கு பங்களித்தன. இறுக்கமான நாணயக்கொள்கை வழிமுறைகளினால் தோன்றி உயர்வடைந்த சந்தை வட்டி வீதங்களுக்கு பதிலிறுக்கும் விதத்தில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில், தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ஏறத்தாள 7 சதவீதப் புள்ளிகளால் ஏறத்தாள 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2006இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த வங்கித்தொழில் துறையிலிருந்து அரசினால் மேற்கொள்ளப்பட்ட கடன்பாடுகள் 2007இல் வரவு செலவுத்திட்ட மட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்தமைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த கடன்பாடுகளே முழுக் காரணமாகும்

**மத்திய வங்கியின் இறுக்கமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளுக்கு மத்தியிலும், பல்வேறு காரணிகளின் காரணமாக பணவீக்கமானது இவ்வாண்டிற்கான ஆரம்ப எதிர்பார்ப்புக்களை விஞ்சிக் காணப்பட்டன.** மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள் 2007இன் முதலரைப் பகுதியில் பணவீக்கம் படிப்படியாக குறைவடைய உதவியது. எனினும், எண்ணெய்யின் பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, 2007 யூலையிலிருந்து எரிபொருள் உதவு தொகைகள் முழுமையாக நீக்கப்பட்டமை மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் ஏனைய பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட கடுமையான உயர்வுகள் என்பன பல பொருட்கள் மற்றும் பண்டங்களின் உள்நாட்டு விலைகள், குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் மேல் நோக்கிச் சீராக்கம் செய்யப்படுவதற்கு வழிவகுத்தன. (சிறப்புக் குறிப்பு 17) பன்னாட்டு விலை அதிகரிப்புக்களுக்கேற்ப

வரைபடம் 1.7 ஒதுக்குப் பணத்தினதும் விரிந்த பணத்தினதும் வளர்ச்சி



## சிறப்புக் குறிப்பு 1

# நாணய இலக்கிடலிலிருந்து பணவீக்க இலக்கிடலை நோக்கி நகருதல்

### உலகளாவிய பின்னணியில் பணவீக்க இலக்கிடுதல்

பணவீக்கத்தினை இலக்கிடுதல் என்பது ஒரு நாணய கொள்கைக் கட்டமைப்பாகும். இது, கிடைக்கக்கூடிய கொள்கை சாதனங்களைப் பயன்படுத்தி ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான முன்னமே குறித்துரைக்கப்பட்ட நேர இடைவெளிக்குள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட அலுவல்சார் கணிய ரீதியான பணவீக்க இலக்குகளை (அல்லது இலக்கு வீக்கங்களை அல்லது உச்ச எல்லைகளை) எய்துவதற்கு எண்ணுகிறது. எனவே பணவீக்க இலக்கிடல் என்பது, அறிவிக்கப்பட்ட பணவீக்க இலக்கிலிருந்து எதிர்வு கூறப்பட்ட பணவீக்கத்தில் ஏற்பட்ட விலகல்கள் மீது கவனம் செலுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டு குறிக்கோளினை நேரடியாக அடைந்து கொள்வதனை இலக்காகக் கொண்ட ஒரு நாணய கொள்கை உபாயமாகும். பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு மூன்று முக்கிய பணப்புகளைக் கொண்டுள்ளது. (i) பணவீக்க இலக்கு: இது நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான வாய்ப்புகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ii) பணவீக்க எதிர்வு கூறல், அத்துடன் (iii) தொழிற்பாட்டு இலக்கிடல் அறிவிக்கப்பட்ட பணவீக்க இலக்கினை எய்துவதற்கு எந்தவொரு தெளிவான இடைநிலை இலக்கும் இல்லாத வழமையான குறுங்கால வட்டி வீதமாகும்.

பல்வேறு நாணய கொள்கை அமைப்புக்களிடையே செலாவணி வீத இலக்கிடல், நாணய இலக்கிடல் அல்லது விலை உறுதிப்பாட்டை எய்துவதற்காக பல் குறிகாட்டி போன்ற இலக்கிடல்கள் பயன்படுத்தப்பட்டன. பணவீக்க இலக்கிடல் உலகம் முழுவதுமுள்ள நாணய அதிகார சபைகளிடையே அதிகளவில் பிரபல்யம் பெற்று வருகின்றது. பணவீக்க இலக்கிடலுக்கான கன்னி முயற்சி 1989ஆம் ஆண்டு நியூசிலாந்து ஒதுக்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பின்னர், பல்வேறு முன்னேற்றங் கண்ட நாடுகளினாலும்[1] பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு பின்பற்றப்பட்டு வருகின்றது. அண்மைய ஆண்டுகளில் தோற்றம் பெற்றுவரும் நாடுகள்[2] பலவும் வழமையான, தெளிவான அல்லது பூரணமான பணவீக்க இலக்கிடல்களைக் கொண்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்களை பின்பற்றத் தொடங்கியுள்ளன. நாடுகள் பணவீக்க இலக்கிடல்களை பின்பற்றிய பின்னர் தாழ்ந்த பணவீக்கங்களை எய்தியமையானது, தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களில் அதிகரிக்கின்ற ஈடுபாடுகளுக்கு வழிவகுத்தது. எனவே கல்விமான்கள், பொருளியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்போர் என பலரும் பணவீக்க இலக்கிடல் ஒரு கட்டமைப்பு என்றும் அது கொள்கையில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்தி மற்றும் நாணயக் கொள்கையின் நடைமுறை ஆகிய இரண்டுடனும் ஒத்துச் செல்கின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் வடிவமைப்பு நடைமுறைப்படுத்தல் மற்றும் செயலாற்றத்தினை மேம்படுத்தக் கூடியதெனவும் கருதினர்.

பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு நிலவுகின்ற நாடுகள் தனிச் சிறப்பானதும் அந்நாட்டிற்கே உரித்தான பண்புகளையும் கொண்டிருக்கின்ற போதும் அத்தகைய கட்டமைப்பு வேலைகள் ஒரே மாதிரியான அடிப்படையிலேயே விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அத்தகை குறித்துரைப்புக்களை ஒன்றில் பொதுவான குறிக்கோள்கள் அல்லது தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் நாணயக் கொள்கை நடத்தைகளினால் அடையாளம் காண முடியும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து வங்கியின் நாணயக் கொள்கைக் குறிக்கோள்கள், வளர்ச்சி மற்றும் தொழில்நிலை உட்பட அரசாங்கத்தின் பொருளாதார குறிக்கோள்களுக்கு ஆதரவாக இருத்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்கட்பட்டு விலை உறுதிப்பாட்டினை வழங்குவதாக இருக்கிறது. தாய்லாந்து வங்கியின் நாணயக் கொள்கையின் முக்கியமான குறிக்கோள் பணவீக்க இலக்கிடலை பேணுவதாகவும் இந்தோனிசிய வங்கியின் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு, ரூபியாவின் உறுதிப்பாட்டு இலக்கினை எய்தும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது பணவீக்கத்தினையும் செலாவணி வீதத்தினையும் பிரதிபலிக்கிறது. இரண்டு மத்திய வங்கிகளும் செலாவணி வீதத்தில் மிகையானதும் தொடர்ச்சியானதுமான ஏற்ற இறக்கங்களைத் தடுப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிடுகின்றன. இதன்படி, பணவீக்க இலக்கு நாணய கொள்கைக்கான பெயரளவு நங்கூரம் என்ற ரீதியில் தொழிற்படுகின்ற வேளையில் செலாவணி வீதத்தில் காணப்படும் நெகிழ்வுத்தன்மை பொருளாதாரத்தில் காணப்படும் அதிர்வுகளை ஈர்ததுக் கொள்ள உதவுகிறது.

### இலங்கையில் பணவீக்க இலக்கிடல்

தற்பொழுது, இலங்கை மத்திய வங்கியின் நாணய முகாமைத்துவமும் நாணயக் கொள்கை நடத்தையும் நாணய இலக்கிடல் கட்டமைப்பினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாணய இலக்கிடல் கட்டமைப்பின் கீழ், விலை உறுதிப்பாட்டினை, பணப்பெருக்கியூடாக ஒதுக்குப் பணத்துடன் இணைக்கப்பட்டுள்ள விரிந்த பண நிரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எய்த முடியும். நாணய வேகத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, பணத்திற்கான கேள்வி உறுதியாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் பணவீக்க இலக்கிடல் அமைப்பொன்றிற்குள் நுழையும் நோக்குடன் நாணயக் கொள்கை மற்றும் பேரண்ட பொருளாதாரத்தின் உலயகளாவிய மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகளுக்கு இணையாக கடந்த பல ஆண்டுகளாக நாணய இலக்கிடல் கட்டமைப்பு படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது.

பெரும்பாலான நாடுகள் பணவீக்க இலக்கிடல்களை பின்பற்றுவதற்கான முக்கிய நோக்கம் ஒன்றில் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான அபிவிருத்திகளைத் தொடர்ந்து நிதியியல் முறைமையில் அதிகரித்த இலகுவான

1 கனடா (1991), ஐக்கிய இராச்சியம் (1992), சுவீடன், பின்லாந்து மற்றும் அவுத்திரேலிய (1993), ஸ்பெயின் (1994), கொரிய குடியரசு (1998), நோர்வே (2001).

2 மெக்சிக்கோ (1995), இஸ்ரேல் மற்றும் செக்குடியரசு (1997), போலந்து, பிரேசில், சிலி மற்றும் கொலம்பியா (1999), தென்னாபிரிக்கா மற்றும தாய்லாந்து (2000), கங்கேரி மற்று ஐஸ்லாந்து (2001), பேரு மற்றும் பிலிப்பைன்ஸ் (2002), இந்தோனிசியா (2005)

முறைகளின் காரணமாக, பணத்தொழிற்பாடுகளுக்கான உறுதியற்ற கேள்வி அல்லது நெருக்கடியான சூழ்நிலையொன்றிலிருந்து தோற்றம் பெறுவதற்கான தேவையாக இருந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில், பணவீக்க இலக்குகளுக்கான வலுவான அர்ப்பணிப் பொன்றினை செய்ய வேண்டியது அவசியமென்பதனால் இதன் மூலம் அதிகரித்துச் செல்லும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் நிதியியல் முறைமை பரீட்சயமான முன்னேற்றகரமானதொரு கட்டத்தினை இன்னமும் அடைந்திருக்காமையினால் இலங்கையில் பணத்திற்கான கேள்வி உண்மையில் சிறந்த உறுதியான நிலையில் இருந்த போதும், இலங்கை மத்திய வங்கி, நாணயக் கொள்கை நடத்துவது தொடர்பன பரந்தளவிலான கலந்துரையாடல்களில் அது மற்றவர்களுக்கு இணையாகக் கலந்து கொண்டதுடன் பணவீக்க இலக்கிடலை பின்பற்றுவதன் சாத்தியம் தொடர்பாக பரீட்சிப்புக்களையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டது. கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அத்தகைய ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் ஆண்டறிக்கைகள் தொடக்கம், காலாந்தர வெளியீடுகள் மற்றும் உயர் அலுவலர் ஆய்வுகள் வரையான பல்வேறு வெளியீடுகளிலும் வெளியிடப்பட்டன.

பணவீக்க இலக்கிடல் அமைப்பிற்குள் நகர்வதற்கு ஆயத்தமாகும் நோக்குடன் மத்திய வங்கி ஏற்கனவே எடுத்த வழிமுறைகள் கீழே தரப்படுகின்றன.

1997 பணவீக்க இலக்கிடல் மீதான ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டதுடன் பெறுபேறுகள் அலுவலர் ஆய்வுகளிலும் (1997, 1999 மற்றும் 2002) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலும் (1999) வெளியிடப்பட்டன.

2001 - காத்திரமான நாணயக் கொள்கை நடத்தைக்கு வசதியளிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக மிதக்க விடும் செலாவணி வீத அமைப்பு பின்பற்றப்பட்டது

2002 - பொருளாதார விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பன தொடர்பாக மத்திய வங்கியின் குறிக்கோள்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் நாணயச் சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையினரைத் தனியார் துறையிலிருந்து (5இல் 3பேர்) பெற்றுக் கொள்வதன் மூலம் நாணயச் சபையின் சுதந்திரத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக நாணயச் சபை விரிவாக்கப்பட்டது.

- நாணயக் கொள்கை தீர்மானமெடுக்கின்ற செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக நாணயக் கொள்கை குழுவொன்று நிறுவப்பட்டது.
- முன்கூட்டியே வெளியிடப்பட்ட கலண்டருக்கிணங்க கிரமமான நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிடுவது தொடங்கப்பட்டது.

2003 - காத்திரமான நாணயக் கொள்கை தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் பொருட்டு தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்டன

- ஆர்வலர்களின் விழிப்புணர்வுகளை மேம்படுத்தியமையினூடாக தொடர்பூட்டல் உபாயங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு போதுமான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

சி. குறிப்பு தொடர்ச்சி

2007 - பகிரங்க கொள்கை ஆவணமொன்றினூடாக (வழிகாட்டல்) மத்திய வங்கியின் கொள்கையை தெளிவுபடுத்தல் தொடங்கப்பட்டது. இவ்வழிகாட்டல், எதிர்கால பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் பணவீக்க அறிக்கையினை பயனுள்ள முறையில் உள்ளடக்கியுள்ளது.

- தனியார்துறை நிபுணர்கள் மற்றும் கல்விமான்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நாணய கொள்கை ஆலோசனைக்குழு நிறுவப்பட்டது.
- பணவீக்க எதிர்வுகூறல்களையும் எதிர்வுகூறல்கள் தொடர்பான முக்கிய எடுகோள்களையும் வெளியிடுதல் தொடங்கப்பட்டது.
- பொருத்தமான பணவீக்க சுட்டெண்ணொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் ஊக்குவிக்கப்பட்டது. இச்சுட்டெண் மைய பணவீக்க சுட்டெண்ணொன்றினை உருவாக்க உதவுமென்பதுடன் நாடளாவிய விலைச் சுட்டெண்ணையும் பிரதிநிதித்துவப்படுத்தும்
- பணவீக்க இலக்கிடல் கட்டமைபு வேலைகளை மேற்கொள்ளும் மற்றைய மத்திய வங்கிகளின் தொழில்நுட்ப உதவியுடன் உள்ளக பணவீக்க எதிர்வு கூறல் மாதிரிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன
- விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்காக காத்திரமான கொள்கைகளை வடிவமைப்பதனை இயலச் செய்யும் விதத்தில் பணவீக்க எதிர்வுகூறல் அளவீடொன்றினை நடத்துவது தொடங்கப்பட்டது
- 2007இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் உபாயத்திட்டம் 2007 - 2011இல் நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை நோக்கி நகருவதற்கான தேவை வழமையான முறையில் அங்கீகரிக்கப்பட்டது.

2008 - பணவீக்க இலக்கிடலைக் கொண்டுள்ள பல நாடுகளும் முதன்மைப் பணவீக்கத்தினையன்றி மையப் பணவீக்கத்தினையே கொண்டுள்ளமையின் காரணமாக நாணயக் கொள்கை நோக்கங்களுக்காக மையப் பணவீக்க சுட்டெண்ணினை தயாரிக்கின்ற செயல்முறை தொடங்கப்பட்டது.

நாணயக் கொள்கையினை மேற்கொள்வதனை இலகுபடுத்தும் பொருட்டு இறைப் பற்றாக்குறையினை வலுவான மட்டமொன்றிற்கு குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட 2003ஆம் ஆண்டின் புதிய சட்டவாக்கம் (இறை முகாமைத்துவம் (பொதுப்பாண்மைச்) சட்டம்) இயற்றப்பட்டதுடன் இவ்வழிமுறைகள் பூரணப்படுத்தப்பட்டன.

மத்திய வங்கி நாணய இலக்கிடல் கட்டமைப்பிலிருந்து பணவீக்க இலக்கிடலுக்கு நகர்வதற்கு மத்திய வங்கி கருதுவதானது படிப்படியானதும் எச்சரிக்கையுடனுமான ஒரு செய்முறையாக இருப்பதுடன் இது இலகுவாக மாறிவிடக்கூடிய ஒரு தேர்வுமல்ல. இதன்படி, மத்திய வங்கி முன்மதியுடையதாகவும் முற்தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற செய்முறைகளை பின்பற்ற வேண்டியுமிருப்பதுடன் அதன் மூலமே, நாட்டிற்குரித்தான பூரணமான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை நடுத்தர காலத்தில் மேற்கொள்ள முடியும்.

உள்நாட்டில் விலையை அதிகரிப்பதானது ஒரே தடவையிலான விலை அதிகரிப்பிற்கு வழிவகுக்கின்ற போதும் அரசாங்கத்தின் (பணநிரம்பலை) விரிவடையச் செய்யும். கடன்பாடுகளினூடாக இவற்றிற்கு உதவுதொகை வழங்குகின்ற தேவை ஒழிக்கப்படுவதன் மூலம் எதிர்கால பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதன் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது.

## நிதியியல் முறைமை உறுதிப்பாடு

**வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதாரங்களிலிருந்தும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளிலிருந்தும் அதிகரித்த அழுத்தங்கள் காணப்பட்ட போதும் நிதியியல் துறை 2007இல் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் உறுதியானதாகவும் காணப்பட்டது.** முதன்மையான நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உயர்ந்த இலாபத்தன்மை, அதிகரித்த மூலதனமட்டம் மற்றும் அவற்றின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் இடர்நேர்வு ஈர்ப்பு இயலளவையும வலுப்படுத்திய உயர்வடைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்குள் மேம்படுத்தப்பட்ட சொத்துக்களின் தரம் என்பனவற்றினூடாக பேணிக் கொண்டன. 2007இல் நாட்டின் வங்கித்தொழில்துறையின் அடைவானது, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இரண்டினதும் கிளை வலையமைப்பு விரிவடைந்தமையுடன் மேம்பட்டது. உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள் சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் பெறுமதிகளுக்கான வெளிப்படுத்துகைகளை கொண்டிராமையினால் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் இறுக்கமான கொடுகடன் நிலைமைகளையும் உயர்ந்த இடர்நேர்வுக் கட்டணங்களையும் தோற்றுவித்த ஐக்கிய அமெரிக்காவின் கீழ்மட்ட வாடிக்கையாளர்கள் வீடமைப்பு ஈட்டு பிரச்சனைகள், இலங்கையைப் பாதிக்கவில்லை. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் தோற்றப்பாடு சாதகமானதாக காணப்பட்ட போதும், கீழ் நோக்கிய இடர்நேர்வுத் தன்மைகள் காணப்படுகின்றமையானது, மோசமான தாக்கத்தினை கொண்டிருக்கக்கூடிய சம்பவங்கள் நிகழ்வதனைத் தடுக்கும் விதத்தில் விழிப்புணர்வினையும் இடர்நேர்வினையும் தொடர்ந்து தணிக்கும் தேவையினை ஏற்படுத்தியிருக்கிறது.

**நிதியியல் துறையினை ஆளுகின்ற மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இரண்டினதும் ஆற்றல் வாய்ந்த தன்மையினை வலுப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பல பணிப்புரைகள் மற்றும் வழிமுறைகளின் காரணமாக தரமுயர்த்தப்பட்டது.** வங்கிகளுக்கான பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பினை 2008இலிருந்து நடைமுறைப்படுத்தவதற்கான ஆரம்ப வேலைகள் முற்றுப் பெற்றுவிட்டன. வங்கிகளின் மூலதனத்தினை இடர்நேர்வு தோற்றப்பாட்டுடன் மிகச் சிறந்த முறையில் இணைத்தல் கொடுகடனுக்கு கொடுகடன் சந்தை மற்றும் தொழிற்பாட்டு இழப்புக்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் கூடியளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய மூலதனத்தினை வழங்கல் என்பனவற்றின் மூலம் பாசல் II இனைப் பின்பற்றுவது வங்கிகளின் ஆற்றல் தன்மையையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. வங்கிகளுக்கான கம்பனி ஆளுமை மீதான பணிப்புரையொன்று மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டதுடன் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான கட்டாய ஒழுக்கக் கோவையும் பங்கு பரிவர்த்தன ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. மேலும், இணங்குவிப்பினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக்கு நகர்ந்தது. பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் முன்மதியுடைய பாதுகாப்புக்களுக்குட்பட்டு, முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்கான முன்மொழிவுகளுக்கும் 2007இல் ஒப்புதலளிக்கப்பட்டது.

**நிதியியல் முறைமைக்கு பக்கபலமாகவுள்ள சட்டக்கட்டமைப்பானது நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு மீள வலுப்படுத்தப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.** சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகள் படுகடன் பிணையங்களை வழங்குவதனூடாக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதனை இயலச் செய்யம் விதத்தில் நிதிக்குத்தகைச் சட்டம் திருத்தப்பட்டது. மேலும், நிதிக்கம்பனிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் புலனாய்வு அதிகாரங்களை வலுப்படுத்தும் பொருட்டு நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தமொன்று வரையப்பட்டுள்ளது. வங்கி முறிவு தவிர்ப்பு சிறப்பு நோக்கங்களுக்கான நிறுவனங்களூடாக சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்களை வழங்குவதனை இயலச் செய்வதற்காகவும், உருவாக்கப்பட்ட நிதியியல் சாதனங்களின் ஒழுங்குவிதிகளுக்காகவும் புதிய பிணைய மயப்படுத்தல் சட்டமொன்று வரையப்பட்டுள்ளது. நிதியியல் பெறுதிகளை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் அதிகார எல்லைக்கள் கொண்டு வரும் பொருட்டு திருத்தப்பட்டு வருகின்றது. மேலும் முன்மதியுடைய மேற்பார்வையை வலுப்படுத்துவதற்காகவும், காப்பறுதிச்சாதனங்களை விநியோகிப்பதற்கான முகவர்களாக வங்கிகளையும் ஏனைய நிதியியல் நிறுவனங்களையும் நியமிப்பதனை அனுமதிக்கும் விதத்தில் காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதி திருத்தப்பட்டு வருகின்றன. கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் அதன் பணிகளினது செயற்பரப்பினை பயன்படுத்துகின்ற தொகுதியினருக்கு கூடியளவிற்கு பன்முகப்படுத்துவதற்கேற்ற விதத்தில் விரிவாக்குவதற்காகவும் பெறுமதி கூட்டப்பட்ட பணிகளை வழங்குவதற்காகவும் திருத்தப்பட்டு வருகின்றது.

## அமைப்பியல் சார்ந்த கொள்கைப் பிரச்சனைகளும் சவால்களும்

**அரசாங்கத்தின் கொள்கை ஆவணமான பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு 2006 - 2016, நடுத்தர காலத்தில் 8 சதவீதத்திற்கும் கூடுதலான வலுவான உயர் வளர்ச்சிப் பாதையொன்றினைப் பேணுவதற்கு எதிர்பார்க்கிறது.** சவால் மிகுந்த பணியான இதனை, பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை மேலும் விரிவாக்குதல், உட்கட்டமைப்பு மற்றும்

39872
22 APR 2008



பொது வசதிகளில் காணப்படும் தற்போதுள்ள தடைகளை கட்டுப்படுத்துதல், கிடைக்கத்தக்கதாக மூலவளங்களை மிகத்திறன்மிக்க முறையில் பயன்படுத்தும் விதத்தில் குறிப்பிடத்தக்க உற்பத்தியாக்க மேம்பாடுகளை எய்துதல் என்பனவற்றைத் தேவைப்படுத்துகின்றது. இக்குறிக்கோள்களை எய்துவதற்கு போட்டித் தன்மைமிக்க விலையில் வலு, தொலைத் தொடர்பூட்டல் பணிகள், குடிக்கும் மற்றும் நீர்ப்பாசன நீர், வீதிகள், துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையம், சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள் போன்றனவற்றை தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதிகரிக்கப்பட்ட முதலீட்டினை வழிப்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

**பத்தாண்டு அபிவிருத்தி கட்டமைப்பில் அறிவிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட சில உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் மெதுவான முன்னேற்றத்தினை தாமதிக்காது முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக மேற்கொள்வது அவசியமானதாகும்.** வலு உருவாக்கத்தின் உயர்வடைந்து செல்லும் செலவு மற்றும் அவை பொருளாதாரத்தின் மீது கொண்டிருக்கக்கூடிய சாத்தியமான போதுமான தாக்கம் என்பன கெரவலப்பிட்டிய, நுரைச்சோலை மற்றும் மேல் கொத்மலை போன்ற குறிப்பிட்ட மிக முக்கியமான வலுத்துறைச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சில திருப்பதிகரமான முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. எனினும், கொழும்பு தெற்கு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம், அம்பாந்தோட்ட கடற்துறைமுக அபிவிருத்தி, கொழும்பு -கட்டுநாயக்கா விரைவுப்பாதை, கொழும்பு கண்டி விரைவுப்பாதை, தென்பகுதி விரைவுப்பாதை, வெளிக் கொழும்பு சுற்றுவட்ட வீதி, வீரவில வானூர்தி நிலையம் போன்ற ஏனைய பாரிய செயற்றிட்டங்கள் பல்வேறு காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்டதனை விட மெதுவான முன்னேற்றத்தினை கொண்டிருந்தன. நடுத்தர காலத்தில் வலுவான உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கும் செலவு உயர்வதனைத் தடுப்பதற்கும் இச்செயற்றிட்டங்களை விரைவுபடுத்துவது அவசியமானதாகும்.

**நடுத்தரகாலத்தில் மிக வலுவான படுகடன் மட்டங்களைப் பேணுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் அரச தனியார் பங்குடமையினை மேம்படுத்துவது அவசியமானதாகும்.** உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் நிதியிடுகின்ற தற்போதுள்ள நடைமுறைகளைத் தொடர்வது வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதற்கு வழிவகுப்பதுடன் வெளிநிற்கும் அரச படுகடனையும் அதிகரிக்கும். அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் நிதியிடுகின்ற பிரபல்யம் பெற்றதொரு முறையாக அரச தனியார் பங்குடமை மாறி வருகின்றது. நிலம், உரிமங்கள், பாதுகாப்பு, அரசாங்க உத்தரவாதங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலமும் தனியார்துறை நிதியிடலை மேற்கொள்ளத்தக்க விதத்தில் இயலுமைமிக்க சூழலொன்றை உருவாக்குதல், செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி தொழிற்படுத்தல் என்பனவற்றினை மேற்கொள்வதன் மூலமும் அரசாங்கம் அரச தனியார்துறை பங்குடமைக்கு வசதியளிக்கலாம். இதனடிப்படையில் அரச தனியார் பங்குடமையானது போட்டி அடிப்படையிலான விலைக் குறிப்பீட்டு செயல்முறைக்கும், ஏகபோக தனியுரிமை அல்லது சிலருமை போட்டித் தன்மையிலிருந்து எழுகின்ற நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுக்கவும் தனியார்துறை பங்குபற்றுனர்கள் சரியான ஒழுங்குமுறைக்குட்பட்டு மிகத்திறன் வாய்ந்த உட்கட்டமைப்பு பணிகளை வழங்க முடியும் (சிறப்புக்குறிப்பு -7).

**அரசின் மீது சுமைகளை ஏற்படுத்தாமல் அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மிகத்திறனுடன் பணிகளை வழங்குவது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு முற்தேவைப்பாடாக விளங்குகின்றது.** பேரண்ட பொருளாதாரத்தின் சமநிலையற்ற தன்மையின் முக்கிய மூலம் மின்வலு, நீர், போக்குவரத்துப் பணிகள், பெற்றோலிய உற்பத்திகள், நெல் கொள்வனவு மற்றும் அரசுடமையாக்கப்பட்ட சந்தை வலையமைப்புக்களினூடாக இன்றியமையாத பண்டங்களை விற்பனை செய்தல் போன்ற சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் வினைத்திறனற்ற தொழிற்பாடுகளிலிருந்தே தோன்றுகின்றது. இந்த அரசுடமையாக்கப்பட தொழில் முயிற்சிகள் வரவு செலவுத்திட்ட நிதியிடலில் அல்லது வங்கிக் கடன்பாடுகளில் தங்கியிருப்பதன் மூலம் பொதுமக்கள் மீது சுமையை ஏற்றுகிறது. தற்போதுள்ள தொழில் முயற்சிகளை தனியார் மயப்படுத்துவதில்லை என்ற கொள்கைக்குப் புறம்பாக மிகின் எயார், மத்திய போக்குவரத்துச்சபை, நெற்சந்தைப்படுத்தும் சபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் வலையமைப்பு போன்ற புதிய தொழில் முயற்சிகளை அரசாங்கம் தொடங்குகின்ற அல்லது பிரச்சினையை எதிர்கொள்கின்ற அரசு தொழில் முயற்சிகளை மீள் எழுச்சிப்படுத்துகின்ற அண்மைய போக்கொன்று காணப்படுகின்றது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், பொதுமக்கள் மீது மேலும் சுமைகளைச் சுமத்தாமல், தனியார் துறையிலும் பார்க்கக் கூடியளவு போட்டித்தன்மையுடனும் வினைத்திறனுடைய தன்மையிலும் பணிகளை வழங்கக் கூடியனவாக இருக்க வேண்டுமென்பதே எதிர்பார்ப்பாகும். அரசாங்கத்தின் உதவுதொகைகளில் தங்கியிராது வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்த தொழிற்பாடுகளூடாக எண்ணிய குறிக்கோள்களை அரசுடைமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் எய்த வேண்டுமாயின் அவை முகாமைப்படுத்தப்படுகையில் சரியான ஆளுகையும் விலையிடல் அமைப்பும் நிறுவப்படுவது அத்தியாவசிய மானதாகும்.

**வேலையின்மை அதன் ஆகக் குறைந்த சாதனை மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கு உற்பத்தியாக்க மேம்பாடுகளிற்கு தொழிலாளரை மிக வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கான தேவையை வெளிக்காட்டுவதுடன் தொழிலாளர் நிரம்பல் மற்றும் கேள்விக்கிடையிலான பொருத்தப்பாடின்மையையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.** கடந்த சில ஆண்டுகளாக தொழிலாளர் உற்பத்தியாக்கம், குறிப்பாக, அண்மைய ஆண்டுகளில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ள கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில்

## சிறப்புக் குறிப்பு 2


# கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி - செயற்றிறன் மற்றும் உபாயங்கள்

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இலங்கையின் கிழக்கு மாகாணமானது நெல் வயலிலிருந்து காடுகள், புதர் நிலங்கள், ஈர நிலங்கள், விரிகுடாக்கள் மற்றும் கடல் நீர் ஏரிகள் என்பவற்றை உள்ளடக்கிய மூலவளங்களைக் கொண்டுள்ளது.[1] மேலும், இது உலகத்திலுள்ள மிகப் பெரிய இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று என்பதில் பெருமை கொள்கின்றது. இருந்த போதிலும் கடந்த இரண்டரை தசாப்தங்களாக நிலவி வரும் உள்நாட்டு முரண்பாடுகள், பொருளாதார அபிவிருத்தியை மெதுவாக்கியதோடு, 2002 - 2006 காலப்பகுதியில் கிழக்கு மாகாண வளர்ச்சி வீதத்தை 5 சதவீத அளவில் கட்டுப்படுத்தியது.[2] கிழக்கு மாகாணமானது நாட்டின் 15 சதவீத நிலப்பரப்பையும் மொத்த சனத்தொகையின் 7.9 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்த போதும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதன் பங்களிப்பு மோசமான குறைந்தளவான 4.7 சதவீதமாக இருந்து வறுமை ஆதிக்கம் செலுத்தும் பின்தங்கிய பிராந்தியமாகவிருந்தது. ஆனாலும் 2007ஆம் ஆண்டின் இறுதியளவில் அரசாங்கமானது பயங்கரவாதக் குழுக்களின் பிடியிலிருந்த நிலங்களின் கட்டுப்பாட்டை வலிந்து பெற்றுக் கொண்டதோடு, பிராந்தியத்தின் இயல்பு நிலையை மீள ஏற்படுத்துவதற்கான சாதகமான சூழலை உருவாக்கியது. இதன் விளைவாக கிழக்கு மாகாணத்தில் மீளத் தமது வசிப்பிடங்களுக்குத் திரும்பும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.[3]

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளார்ந்த வளங்கள், சரியான நேரத்திலும், கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் பொருத்தமான முறையிலும் பங்கிடப்படுமாயின், இது தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய உந்து சக்தியைக் கொடுக்கக்கூடிய புதிய மூலவளத்தின் வளர்ச்சிக்கு இட்டுச்

**வரைபடம் - சி.கு. 2.1**

**கிழக்கு மாகாணத்தின் தேசப்படம்**




மூலம் : மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டம் 2007 - 2010
தேசிய திட்டமிடல் திணைக்களம், நவெம்பர் 2007

1. கிழக்கு மாகாணமானது, 9,361 சதுர கி.மீ. பரப்பளவான நிலப்பரப்பை உள்ளடக்கி நாட்டின் மொத்த நிலப்பரப்பின் 15 சதவீதத்தைக் கொண்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத்திலுள்ள 450,450 கெக்டேயர் பரப்பளவான வேளாண்மை நிலம், நாட்டின் ஒட்டு மொத்த வேளாண்மை நிலத்தின் 26 சதவீதத்தைக் கொண்டிருக்கின்றது. சனத்தொகை 1.6 மில்லியன். இது மொத்த சனத்தொகையின் 7.9 சதவீதமாகும். 2006இல் கிழக்கு மாகாணத்தின் பணிகள் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 50 சதவீதப் பங்களிப்பைச் செய்த அதேவேளையில், வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறையின் பங்குகள் முறையே 23 சதவீதமாகவும் 27 சதவீதமாகவும் இருந்தன.

2. இலங்கை சமூக பொருளாதாரத் தரவு 2007.

3. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் தாபனத்தின் (யு.என்.எச்.சி.ஆர்.) அறிக்கைகளின்படி, 2008 சனவரி இறுதியில் கிழக்கிற்கு மீளத் திரும்பிய இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 170,763 ஆக இருந்தது.

சி. குறிப்பு தொடர்ச்சி

அட்டவணை சி.கு. 2.1

**கிழக்கு மாகாணத்தின் முதலீட்டுத் திட்டத்தின் சுருக்கம் - மிக முக்கிய துறைகள்/ நிகழ்ச்சித் திட்டங்களின்படி**

தொகை ரூ.பில்லியனில்

| துறை/ நிகழ்ச்சித்திட்டம் | 2007 | 2008 | 2009 | 2010 | மொத்தம் | மொத்தம் % |
|---|---|---|---|---|---|---|
| திரும்பி வருபவர்களின் மீள்குடியேற்றம் | 3.7 | 4.8 | 6.0 | 7.0 | 21.5 | 10.8 |
| உற்பத்தியாக்க துறைகள் மற்றும் பிராந்திய பொருளாதாரத்தின் புனரமைப்பு | 2.1 | 8.7 | 10.9 | 12.2 | 33.9 | 17.1 |
| பொருளாதார உட்கட்டமைப்பை முன்னேற்றுதல் | 11.8 | 21.3 | 25.8 | 24.9 | 83.8 | 42.2 |
| சமூக உட்கட்டமைப்பை உறுதிப்படுத்துதலும் சமூகப் பணிகளை ஊக்குவித்தலும் | 2.0 | 6.4 | 5.3 | 5.4 | 19.1 | 9.6 |
| மனித குடியேற்ற அபிவிருத்தி | 6.5 | 9.3 | 11.1 | 11.1 | 38.0 | 19.1 |
| பொது நிறுவனங்களின் ஆளுமையைக் கட்டியெழுப்புதல் | 0.5 | 0.5 | 0.6 | 0.6 | 2.2 | 1.2 |
| **மொத்தம்** | **26.6** | **51.0** | **59.7** | **61.2** | **198.5** | **100.0** |

மூலம் : மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டம் 2007 - 2010
தேசிய திட்டமிடல் திணைக்களம், நவெம்பர் 2007

செல்லும் என்பதனைக் காட்டுகின்றது. குறிப்பாக வேளாண்மை, மீன்பிடி, காடாக்கம் மற்றும் அகழ்வுத் துறைகள் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை உருவாக்கக் கூடியதும் அதன் மூலம் வலயத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்குமான குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருக்கின்றன.

கிழக்கு மாகாணத்திலுள்ள இயற்கைச் செல்வங்களை பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்ட உள்ளார்ந்த வளங்களை பல்வேறு துறைகளின் கீழ் ஆராயலாம். முதலாவதும் முதன்மையானதுமாக திருகோணமலைத் துறைமுகமானது தெற்காசிய பிராந்தியத்திற்கான பிரதான வர்த்தக மற்றும் கைத்தொழில் மையப் பகுதியாகவும் மாறுவதற்குரிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருக்கின்றது. 436 கி.மீ. நீளமான கரையோரம், துறைமுகப்படுத்தக்கூடிய பாரிய நீளமான அழகிய கடற்கரைகள் மற்றும் உயிரினங்கள் பாதுகாக்கப்பட்ட சூழல் பகுதி என்பன சுற்றுலாக் கைத்தொழிலை உற்சாகப்படுத்துவதற்கான வளங்களை கொண்டுள்ளது. பரந்தளவான கடற்பரப்பை அணுகக்கூடியதாக இருப்பதானது மீன்பிடி மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. வளமான மண், வடக்கு கிழக்கு பருவக்காற்றுக்களால் கிடைக்கும் உயர்ந்தளவான மழைவீழ்ச்சி மற்றும் பரந்தளவான சனத்தொகைச் செறிவற்ற பகுதிகள் என்பன கிழக்கு மாகாணத்தை உயர்ந்த வலுவான வேளாண்மை நடவடிக்கைகளுக்கு உகந்த இடமாக்கியது.

இதற்கமைவாக, அரசாங்கமானது "மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம்: 2007 - 2010" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது (நெகனகிரா உதானயா அல்லது கிழக்கின் உதயம்). இது, மாகாணத்தின் உட்கட்டமைப்பையும் துணைப் பணிகளையும் முன்னேற்றுதல் மற்றும் தரமுயர்த்துதல் மூலம் நீடித்த பொருளாதார மலர்ச்சியை சாத்தியமாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரங்களை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தூண்டுவதற்கு முன்னர், இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதனூடாக பிரதேசத்திலுள்ள மக்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகளை உடனடியாக பெற்றுக் கொடுப்பதற்கு இத்திட்டம் எதிர்பார்க்கின்றது. நெகனகிரா உதானய நிகழ்ச்சித்திட்டமானது அடுத்த மூன்று ஆண்டுகளில் பொருளாதார உட்கட்டமைப்பு, மனிதவளம் மற்றும் இயற்கை மூலவளங்களை அபிவிருத்தி செய்வதனூடாக வேளாண்மை, மீன்பிடி, கைத்தொழில்கள், சுற்றுலாத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

அட்டவணை சி.கு. 2.1இல் குறிப்பிட்டவாறு, கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின் உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் மொத்த முதலீட்டினளவு, 2007ஆம் நிதியாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூ.26.6 பில்லியன் உள்ளடங்கலாக ரூ.197 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. கூடியளவான தொகை (ரூ.42.5 பில்லியன்) பொருளாதார உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக ஒதுக்கப்படும். அதேவேளை ரூ.33.9 பில்லியனானது உற்பத்தியாக்கத்துறை மற்றும் பிராந்திய பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கு ஒதுக்கப்படும். ரூ.19.3 பில்லியனானது மனிதவள அபிவிருத்திக்கும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் ஒதுக்கப்படும். கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியிடுவதற்காக ஏற்படும் மொத்த முதலீட்டுச் செலவில் ஏறத்தாழ 52 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்து திறைசேரியால் வழங்கப்பட்ட அதேவேளை 30 சதவீதம் திறைசேரியின் சொந்த நிதியிலிருந்து நேரடியாக ஒதுக்கப்படும். மிகுதி 18 சதவீதம் தனியார்துறை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் முதலீட்டிற்காக கிடைக்கக்கூடியதாக இருந்தது.

குறுங்கால முன்னெடுப்புக்கள், 2007 திசெம்பரில் தேசிய கட்டுமான அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் பொது நிர்வாகம் மற்றும் பணி விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான 180 நாள் நிகழ்ச்சித் திட்டத்தை உள்ளடக்கியிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம், நேர் திரும்பி வருவோரின் மீளக்குடியேற்றத்தைக் கருத்திற் கொண்டு மிதி வெடிகளை அகற்றுதல், வேளாண்மையை மீள ஆரம்பித்தல், வீதித் தொடர்புகளை மீள் நிறுவுதல் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம், மின்வலு, காவல் நிலையங்கள்,

வைத்தியசாலைகள் மற்றும் மக்கள் நிர்வாகம் என்பனவற்றை மீண்டும் செயற்படுத்துவதனை உள்ளடக்கியிருந்தது.

கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்புடன் அரசாங்கமானது கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளை ஊக்கப்படுத்துவதற்காக ஏற்கனவே பல செயலூக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. வரவு செலவுத்திட்டம் 2008 இனூடாக கிழக்கு மாகாணத்தில் ரூ.50 மில்லியனுக்கு அதிகமாகவும், 50 பேருக்கு மேற்பட்ட நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் வழங்கும் முதலீடுகளுக்கு, அரசாங்கம் புதிய வரி விடுப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முதலீடுகளைப் பொறுத்தவரை இலாபங்களும் வருமானமும் (அ) தொடர்பான புதிய தொழில்களைப் பொறுவத்தவரையில் இலாபங்களை ஈட்டும் ஆண்டிலிருந்து அல்லது (ஆ) நிறுவனமானது வர்த்தக தொழிற்பாடுகள் தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகள் நிறைவடைந்த மதிப்பீட்டாண்டிலிருந்து முதலில் எது இடம் பெறுகின்றதோ அந்த ஆண்டிலிருந்து 5 ஆண்டு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் புதிய தொழில்களுக்கு பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் முன்னமே அடையாளம் காணப்பட்ட பொறி மற்றும் பொறித் தொகுதிகள் சுங்கத் தீர்வை தளத்தல்களுக்கும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்குப் பெறுவதற்கும் தகுதியுடையவையாகும்.

கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டமானது பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளை சீர்படுத்துவதன் ஊடாக கிராமியப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. இது உற்பத்தித் திறனை உயர்த்துதல், உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் சந்தைகளின் அணுகும் தன்மையை அதிகரித்தல் என்பவற்றின் ஊடாக பயிர்களின் வேளாண்மை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் கால்நடைத்துறை போன்றவைகளின் அபிவிருத்தியை உள்ளடக்கியுள்ளது. இவை உற்பத்தி மீதான முதலீடுகள், செயற்பாடுகள் மற்றும் இத்துறைகளின் பெறுமதி அதிகரிப்பை ஊக்கப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கமானது கைத்தொழில் அபிவிருத்தியை வசதிப்படுத்துவதற்காக கைத்தொழில் வலயங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது. கிழக்கின் உதயம் திட்டமானது மேலும் கடற்கரையோரமாக ஏற்கனவேயிருக்கும் இடங்களைப் புனரமைப்பதன் ஊடாக கிழக்கு மாகாணத்திலுள்ள உள்நாட்டு மற்றும் பன்னாட்டு, சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்களை வகுத்துள்ளது.

இது இப்பிராந்தியத்தின் பொருளாதார உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட வழிமுறைகளின் மூலம் பின்பற்றப்படும். வலுவைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணத்தின் 58 சதவீதமான வீட்டுத்துறையினர் தேசிய மின் தொகுதியிலிருந்து மின்வலுவைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் கிழக்கின் உதயம் திட்டமானது திருகோணமலையில் 500 மெ.வா நிலக்கரி வலு பொறியினை அமைப்பதன் ஊடாக வலு பிறப்பிக்கும் ஆற்றலை அதிகரிப்பதற்குக் கருதியுள்ளது. மேலும், இது கிழக்கு மாகாணத்தின் கிராமங்களுக்கு ஒளியூட்டுவதற்கான ஏறத்தாள 300 திட்டங்களினூடாக ஏற்கனவேயிருக்கும் மின் சுற்றோட்டப் பாதையை அதிகரிப்பதற்கும் கிராமிய மின்வலுத் தொகுதியின் விரிவாக்கத்திற்குமான துணை நிலையங்கள் மற்றும் மின்கடத்தி வழிகளை அமைப்பதற்கும் கருதியுள்ளது. வீதித் துறையைப் பொறுத்தவரை ஏற்கனவேயிருக்கும் வீதி மற்றும் பாலங்களின் வலையமைப்பைப் புனரமைப்பதற்கும் முன்னேற்றுவதற்குமாக தற்போதுள்ள 17 செயற்றிட்டங்கள் மற்றும் உத்தேச புதிய வீதிகள் மற்றும் பாலங்கள் என்பன நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கு மிடையிலான தொடர்புகளை முன்னேற்றுதல், போக்குவரத்துச் செலவைக் குறைத்தல், ஏனைய மாகாணங்களுடனான தொடர்பினை முன்னேற்றுதல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக பின் தங்கிய பகுதிகளைத் திறந்து விடுதல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுப் போக்குவரத்துப் பணிகளும் திறனான போக்குவரத்துப் பணிகளை வழங்குவதற்காகவும் புகையிரத மற்றும் பேருந்து பணிகளின் இணைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் புனரமைப்பு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலைத் துறைமுகம் அரச, தனியார் பங்குடமையினூடாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் துறைமுகமானது சுற்றிவரவுள்ள 10,565 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்தி துறைமுக நகராக அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றது. பாரிய கப்பல்களை நிறுத்துதற்காக துறைமுகத்தை ஆழமாக்குவதன் ஊடாகவும், இரண்டு அலைத் தாங்கிகளை அமைப்பதனூடாகவும் அம்பாறை மாவட்டத்தின் ஒலுவிலில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக கிழக்கின் உதயம் செயற்றிட்டமானது மேலும் குழாய் வழி நீர் கிடைப்பனவை மேம்படுத்துவதனூடாக நீர் வழங்கல் மற்றும் சுகாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு எதிர்பார்க்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் மீள் எழுச்சியானது மக்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றுவது மட்டுமன்றி இதன் விளைவுகள் இதனுடன் இணைந்த மாகாணங்களுக்கும் சிறிது சிறிதாகப் பரவுவதனூடாக முழுநாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யும்.

**உசாத்துணை**


1. மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம்: 2007 - 2010, தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதித் திட்டமிடல் அமைச்சு, நவெம்பர் 2007.

2. வரவு செலவுத்திட்ட உரை: 2008, நிதித் திட்டமிடல் அமைச்சு, திசெம்பர் 2008

தொடர்ச்சியாக மேம்பட்டுக் காணப்படுவதனை அவதானிக்கும் போது ஊக்கம் தருவதாகக் காணப்படுகின்றது. எனினும், தொழிலாளர் நிரம்பல் மற்றும் கேள்வியில் காணப்படும் அதிகரித்துச் செல்லும் பொருத்தப்பாடின்மையானது பட்டதாரிகள் உட்பட இளைஞர் தொழிலின்மையின் உயர்ந்த வீதம் மற்றும் ஏற்கனவே பாரியதாக இருக்கும் அரச பணிகளில் இணைவதற்கான அவர்களின் விருப்பம் என்பனவற்றின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்ற வேளையில், தனியார் துறையிலுள்ள சில துறைகள் தேவையான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளன. அதேவேளை, வேளாண்மை தொழில்நிலைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழிற்படை வீழ்ச்சியடைந்து செல்வதனைக் கருத்திற் கொள்கையில் வேளாண்மைத்துறையில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவது, வேளாண்மைத்துறையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு வளர்ச்சியையும் கூடியளவிற்கு ஏற்றத்தாழ்வற்ற பிராந்திய வளர்ச்சியையும் எய்துவதற்கு முற்தேவைப்பாடாகவுள்ளது.

**கல்வி அறிவு வீதங்களின் நியதிகளில் இலங்கை கல்வியில் சாதனைகளையும் ஆரம்ப மற்றும் இரண்டாந்தர கல்வி பாராட்டத்தக்க விதத்திலும் அபிவிருத்தியடைந்ததாகக் காணப்பட்ட போதும் மூன்றாம் தரக் கல்வியில், குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் பிராந்திய மட்டங்களுக்கு பின் தங்கியே காணப்படுகின்றது.** இலங்கையில் பல்கலைக்கழகக் கல்விக்கான அனுமதி மிகக் கடுமையான போட்டியைக் கொண்டதாகவும் பல்கலைக்கழக கல்விக்காக தகைமை பெற்றவர்களில் 15 சதவீதத்திற்கும் குறைவானவர்களே உள்ளூர் அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அந்த 15 சதவீதமான மிகச் சிறந்த மாணவர்களும் நிரம்பலால் உந்தப்பட்ட பல்கலைக் கல்வியை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இது தொழிலாளர் சந்தைத் தேவைப்பாடுகளுடனும் தொழில் முயற்சியாண்மை கலாச்சாரத்துடனும் சிறிதளவே தொடர்பானதாக விளங்கி தொழிலாளர் நிரம்பல் மற்றும் கேள்விக்கிடையே பொருத்தப்பாடின்மையினை உருவாக்குகின்றது. உள்ளூர் பல்கலைக்கழகங்களில் ஏறத்தாழ 65 சதவீதமான மாணவர்கள் சமூக அறிவியல், மானிடவியல் கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்படுவதுடன் அத்தகைய பட்டதாரிகளில் கணிசமான விகிதத்தினால் உற்பத்தித்திறன்மிக்க தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகளையும் எதிர்நோக்குகின்றனர். இவர்கள் தொழிலற்றவர்களாக அல்லது குறைந்த தொழில் நிலையில் நீண்டகாலம் இருப்பது மனவிரக்கதிக்கும், சமூகப் பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கின்றது. நிதியியல் அல்லது மூலவளத்தடைகளும் அரச பல்கலைக்கழக முறைமையின் மேம்பாட்டினை மட்டுப்படுத்துவதுடன் நிதியிடுவதற்கு மாற்று மூலவளங்களை கண்டறிய வேண்டிய தேவையினையும் எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே, அனைவருக்கும் மிகப் பொருத்தமான உயர் கல்வியை வழங்கத்தக்க விதத்திலும் தொழிலாளர் நிரம்பல் மற்றும் கேள்விக்கிடையிலுள்ள பொருத்தப்பாடின்மையினைக் குறைக்கத்தக்க விதத்திலும் உயர் கல்வி முறையினை அவசரமாக சீர்திருத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

## 1.3 வெளிநாட்டு பொருளாதார சூழல் மற்றும் தோற்றப்பாடு

**2007இன் முதலரைப்பகுதியில் பலநாடுகளினாலும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை பின்பற்றப்பட்டமைக்கிடையிலும் உலகளாவிய பொருளாதாரம் தொடர்ந்து ஐந்தாவதாண்டாக 4 சதவீதத்திற்கும் கூடுதலாக தொடர்ந்தும் விரிவடைந்தது. 2007இன் பின்னரைப் பகுதியில் உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் மற்றும் பண்டங்களின் விலைகள் மற்றும் ஐ.அமெரிக்காவில் உருவான துணை வாடிக்கையாளர் பிரச்சனைகளிலிருந்து தோன்றிய நிதியியல் சந்தைகளின் குழப்பநிலைமை என்பன வளர்ச்சிச் செயலாற்றத்தினைக் குறைத்து விட்டன.** 2007இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் ஆரோக்கியமான விதத்தில் வளர்ச்சியடைந்த உலகளாவிய பொருளாதாரம் இறுதிக் காலாண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்தமைக்கு நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட குழப்ப நிலைமைகளே பெருமளவிற்கு காரணமாகும். பன்னாட்டு நாணய நிதியத்தின் வேர்ல்ட் எக்கொனமிக் அவுட்லுக் (2008 சனவரி பூரணப்படுத்தப்பட்டது). இதன்படி, உலகப் பொருளாதாரம் 2006இன் 5.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஐ.அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி. தயாரிப்பு மற்றும் வீடமைப்புத் துறை நடவடிக்கை நலிவுற்ற தன்மை காரணமாக நான்காம் காலாண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்தது. எனினும், சீனா, இந்தியா, ருசியா, பிரேசில் என்பனவற்றில் காணப்பட்ட விரைவான வளர்ச்சி ஐ.அமெரிக்காவில் காணப்பட்ட மிதமான வளர்ச்சியை எதிரீடு செய்ததுடன் இந்நாடுகள் ஒன்று சேர்ந்து கடந்த ஆண்டின் உலகளாவிய வளர்ச்சியில் ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வகைகூறின. மற்றைய தோற்றம் பெற்று வரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் கூட வலுவான வளர்ச்சியைப் பேணின. யூரோ பிராந்தியத்தில் வளர்ச்சி மெதுவடைந்தமைக்கு யூரோ வலுவடைந்து வருவதும் ஐ.அ.பொருளாதாரம் மெதுவடைந்து காணப்படுவதுமே ஓரளவு காரணமாகும். யப்பானில் வளர்ச்சி குறைவுற்றமைக்கு கட்டட நியமங்கள் இறுக்கமாக்ககப்பட்டமையின் விளைவாக கட்டுமானக் கைத்தொழில் மெதுவடைந்தமை மெதுவான உலகளாவிய வளர்ச்சி மற்றும் ஒப்பீட்டு ரீதியில் வலுவான யென் என்பன காரணமாக விளங்கின.

**ஐக்கிய அமெரிக்க துணை வாடிக்கையாளர் ஈட்டுச் சந்தையில் காணப்பட்ட முறிவுகளினால் தோன்றிய துணை வாடிக்கையாளர் நெருக்கடிகளின் தோற்றம் காரணமாகத் உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகள் மிகக் கூடுதலானளவிற்கு ஏற்ற இறக்கங்களுக்குட்பட்டதாக மாறின (சிறப்புக்குறிப்பு - 18).** அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் பலவற்றினாலும் வட்டிவீத குறைப்பு, திரவ உள்ளீடுகள் போன்ற வடிவங்களில் மேற்கொள்ளப்பட்ட இணைக்கப்பட்ட தொழிற்பாடுகளினால் வங்கிகளுக் கிடையிலான சந்தைகளில் காணப்பட்ட திரவப்பற்றாக் குறைகளை விடுவிக்க உதவியிருக்கின்றன. வலுவான வளர்ச்சியும் சிறந்த கொள்கைச் சூழலும் தொடர்ச்சியான வலுவான மூலதன உட்பாய்ச்சலுக்கு ஆதரவளித்திருப்பதன்

காரணமாக தோற்றம் பெற்று வரும் சந்தைகள் இதுவரை தாக்குப்பிடிக்கக் கூடியனவாக இருந்த போதும், பங்குச் சந்தை விலைகளில் அண்மையில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் சில பரவுவதை தவிர்க்க முடியாதவையாக இருக்குமென்பதனை எடுத்துக் காட்டின.

**நாடுகள் பலவும் உயர்வடைந்து செல்லும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக அவற்றின் நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்குவதன் காரணமாக துணை வாடிக்கையாளர் நெருக்கடிக்கு முன்பே அவற்றின் குறுங்கால வட்டி வீதங்கள் உயர்வடைந்துவிட்டன.** சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மை மற்றும் உயர்வடைந்து செல்லும் பண்ட விலைகள் என்பனவற்றிலிருந்து தோன்றிய பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக உலகெங்குமுள்ள மத்திய வங்கிகள் தமது கொள்கை வீதங்களை உயர்த்தியமையின் காரணமாக யூலை வரை குறுங்கால வட்டி வீதங்கள் உயர்வடைந்து சென்றன. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பன்னாட்டு விலைகள் விதி விலக்கான விதத்தில் விரைவான வேகத்தில் அதிகரித்தமைக்கு மக்காச் சோளம் மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் உயிரின - எரிபொருள் உற்பத்திக்கு அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டமை, மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் பல நாடுகளிலும் காணப்பட்ட நிரம்பல் விநியோகத் தடைகள் என்பன காரணங்களாக அமைந்தன. எனினும், 2007 யூலையிலிருந்து பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட குழப்ப நிலைமைகளின் காரணமாக, ஓரிரவு வட்டி வீதங்களை உறுதிப்படுத்துவதற்காக, முக்கியமாக முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக கணிசமானளவு திரவத்தன்மையினை உள்ளீடு செய்தன. அதேவேளை, யப்பான், அவுத்திரேலியா, கொரியா, சீனா, சிலி, மெக்சிக்கோ மற்றும் யூரோ பிரதேசங்கள் போன்ற நாடுகள் இவ்வாண்டில் தமது கொள்கை வீதங்களை உயர்த்தின. உலக நிதிச் சந்தைகளில் காணப்பட்ட குழப்ப நிலைமை நிச்சயமற்ற தன்மையினை அதிகரிக்கச் செய்து நாணயக் கொள்கையை, குறிப்பாக அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தை நாடுகளில் மேற்கொள்வதில் சவால்களை தோற்றுவித்திருக்கின்றன.

**முக்கியமான நாணயங்கள் 2006இல் அவதானிக்கப்பட்ட அதே போக்குகளையே பெருமளவிற்கு பின்பற்றி வருகின்றன.** உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, பொருளாதாரம் மெதுவடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2007ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தொடர்ந்தும் நலிவடைந்தது. 2007ஆம் ஆண்டுப் பகுதியில், யூரோ மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கெதிராக டொலர் விரைவான வேகத்தில் நலிவடைந்த வேளையில், இசுடேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பனவற்றிற்கெதிராக குறைந்த வீதத்தில் தேய்வடைந்தது. உயர்ந்து நடைமுறைக்கணக்கு மிகை மற்றும் வலுவான நிதியியல் உட்பாய்ச்சல் என்பனவற்றின் விளைவாகத் தோன்றிய சீனாவின் அதிகளவில் உயர்கின்ற பன்னாட்டு ஒதுக்கின் காரணமாக ரென்மென்பி ஐ.அ.டொலருக்கெதிராக தொடர்ந்தும் வலுவான நிலையில் காணப்பட்டது. சொத்துப்பட்டியல் முதலீட்டின் வாயிலாக உயர்ந்தளவு மூலதன உட்பாய்ச்சல் இந்தியாவிற்குள் புகுந்தமையும் தொடர்ச்சியான வளர்ச்சி உத்வேகமும் இந்திய ரூபா உயர்வடைய வழிவகுத்தது. யூரோ வலுவடைந்தமைக்கு மற்றைய முன்னேற்றங் கண்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில், யூரோ பிராந்தியத்தில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த பணவீக்கமும் மிக மிதமான மெதுவான போக்கு காரணங்களாக அமைந்தன.

**அட்டவணை 1.4 உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்)**

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 |
| **உலக வெளியீடு** | 4.4 | 5.0 | 4.9 | 4.1 |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.5 | 3.0 | 2.6 | 1.8 |
| ஐக்கிய அமெரிக்கா | 3.1 | 2.9 | 2.2 | 1.5 |
| யூரோப்பகுதி | 1.5 | 2.8 | 2.6 | 1.6 |
| ஐக்கிய இராச்சியம் | 1.8 | 2.8 | 3.1 | 2.3 |
| யப்பான் | 1.9 | 2.4 | 1.9 | 1.5 |
| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | 7.0 | 7.7 | 7.8 | 6.9 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 9.0 | 9.6 | 9.6 | 8.6 |
| சீனா | 10.4 | 11.1 | 11.4 | 10.0 |
| இந்தியா | 9.0 | 9.7 | 8.9 | 8.4 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | 7.5 | 9.2 | 6.6 | 6.7 |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றறங்கண்ட பொருளாதாரம் | 6.1 | 7.4 | 4.3 | 5.0 |
| அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரம் | 12.1 | 14.9 | 12.5 | 11.3 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 5.8 | 8.2 | 5.4 | 5.3 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 11.1 | 11.0 | 9.2 | 9.0 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.3 | 2.3 | 2.1 | 2.0 |
| அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரம் | 5.2 | 5.1 | 5.9 | 5.3 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொலர்கள்) | | | | |
| எண்ணெய் | 41.3 | 20.5 | 6.6 | 9.5 |
| எரிபொருள் அல்லாதவை | 10.3 | 28.4 | 12.2 | -6.7 |
| **ஆறுமாத இ.வ.கி.வ.வீதம் (சதவீதம்) ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது** | 3.8 | 5.4 | 5.4 | 5.5 |

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சன. 2008 மற்றும் ஒத். 2007) ப.நா.நிதியம்

**2008இல் உலகளாவிய பொருளாதாரம் 4.1 சதவீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த தொடர்ச்சியான ஆறு ஆண்டுகளின் வளர்ச்சி வீதமான 4.0 சதவீதத்தினைவிட உயர்வானதாக இருந்த போதும் 2007இன் வளர்ச்சி வீதமான 4.9 சதவீதத்தினைவிட குறைவானதாகும்.** மிதமான உலகளாவிய பொருளாதார விரிவாக்கத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் துணை வாடிக்கையாளர்களது நெருக்கடியினைத் தொடர்ந்து முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் நிதியியல் தளர்ச்சி மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களுக்கான நிதியியல் பாய்ச்சல் மெதுவடைவதனால் ஏற்படக்கூடிய தாக்கம் பரவக்கூடிய சாத்தியமான தன்மை என்பன காரணங்களாக அமைந்தன. 2008இல் முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்கள் 2007இன் 2.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளான ஐ.அமெரிக்கா மற்றம யூரோ பிராந்தியங்கள்

2007இன் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி வீதமான முறையே 2.2 சதவீதம் மற்றும் 2.6 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் முறையே 1.5 சதவீதம் மற்றும் 1.6 சதவீதம் கொண்ட மிதமான வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2007இன் 7.8 சதவீதத்திலிருந்து 2008இல் 6.9 சதவீதத்திற்கு மிதமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலில் தங்கியுள்ள தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்கள் உலகளாவிய கொடுகடனில் வெட்டு மற்றும் திரவக் குறைப்பு என்பனவற்றின் காரணமாக பாதிக்கப்படக்கூடும். எனினும், இப்பொருளாதாரங்கள் உள்நாட்டுக் கேள்வியின் வலுவான உத்வேகத்திலிருந்தும் மிக ஒழுக்காற்றுக்குட்பட்ட பேரண்டப் பொருளாதார கொள்கைக் கட்டமைப்பிலிருந்தும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் போல் தோன்றுகின்றது. பண்டங்களை ஏற்றுமதி செய்பவர்களைக் கொண்ட பொருளாதாரங்கள் உயர்ந்த உணவு மற்றும் வலு விலைகளிலிருந்து தொடர்ந்தும் நன்மைகளைப் பெற்று வருகின்றன. உலகளாவிய வளர்ச்சி எறிவுகளுக்கான கீழ் நோக்கிய இடர்நேர்வுகள், துணை வாடிக்கையாளர் நெருக்கடிகளின் தாக்கங்கள் பரவிச் செல்வதன் காரணமாக தீவிரமடைந்து வருகின்றன. மெதுவான போக்கினைத் தவிர்ப்பதற்கும் அல்லது மந்த நிலைமையைத் தடுப்பதன் பொருட்டும் ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கு வட்டி வீதங்களை கடுமையாகக் குறைப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டதுடன் ஐ.அ. அரசாங்கம் நுகர்வினையும் முதலீடுகளையும் உத்வேகப்படுத்துவதற்கான இறைத்தூண்டல் பொதியொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

**உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு பண்ட விலைகள் வெளியீட்டு இடைவெளி குறுக்கமடைகின்றமை மற்றும் விரிவடைந்து வருகின்ற இறை மற்றும் பொருளாதாரம் மெதுவடைகின்றமை துணை வாடிக்கையாளர் தொடர்பான திரவப் பற்றாக்குறை என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைகள் என்பனவற்றின் காரணமாக 2008இல் உலகளாவிய பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் போல் தோன்றுகின்றது.** மசகெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு விலைகள் உலகளாவிய ரீதியில், குறிப்பாக தோற்றம் பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உயர்வடைந்து செல்லும் பணவீக்கத்திற்கான மூலமாக விளங்குகின்றது. இந்நாடுகளில் உணவுப்பொருட்கள் அவற்றின் நுகர்வுக்கூடையில் 35 - 40 சதவீதத்தினை அல்லது அதற்குக் கூடுதலான பங்கைக் கொண்டிருக்கின்றன. (சிறப்புக் குறிப்பு 17). 2008இல் உலகளாவிய பொருளாதாரம் சிறிதளவால் மெதுவடையும் என எறிவு செய்யப்பட்டுள்ள போதும், 2008இல் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளமையினால் எண்ணெய் விலைகள் உயர்ந்த வீதத்திலேயே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏதாவது நிரம்பல் அதிர்வுகள் அல்லது புவிசார் அரசியல் கரிசனைகள் உயர்வடையக் கூடியதன்மைகள் மேலும் விலை உயர்வுகளுக்கு இட்டுச் செல்வதுடன் உயர்ந்த பணவீக்கத்திற்கும் காரணமாகக் கூடும். பணவீக்கத்திற்கான இன்னொரு மூலம் பல்வேறு அபிவிருத்தியடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தை நாடுகளின் உற்பத்தி இடைவெளி நெருங்கி வருவதாகும். இந்நாடுகளில் அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சி, உற்பத்தி இயலளவினை முழுமையாகப் பயன்படுத்தச் செய்திருக்கிறது. இந்நாடுகளில் எந்தவொரு மேலதிக விரிவாக்கமும் உயர்ந்த கூலி மற்றும் செலவுகளால் உந்தப்பட்ட பணவீக்கம் என்பனவற்றிற்கான கேள்விக்கு வழிவகுக்கும். எனினும், உலகளாவிய நிதியியல் சந்தையில் காணப்பட்ட அண்மைய தளர்ச்சி இந்நாடுகளின் மெதுவான தன்மைக்கும் வழிவகுத்து தொழிலாளர் சந்தைகளின் அழுத்தத்தை விடுவிக்கும். ஆகவே முன்னேற்றம் கண்ட நாடுகளின் பணவீக்க அழுத்தங்கள், பொருளாதாரம் மெதுவடைவதனால் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதும், சில நாடுகளில் இரண்டாவது தடவையாகவும் இத்தாக்கங்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் பற்றி கடுமையான கரிசனைகள் காணப்படுகின்றன. தோற்றம் பெற்று வரும் சந்தை நாடுகள் சிலவற்றில் பணவீக்கம் கரிசனைக்குரிய முக்கிய கொள்கையாக தொடர்ந்தும் விளங்கும்.

## 1.4 நடுத்தரகால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு சவால்கள் மற்றும் கொள்கைகள்

**பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளினதும் பரந்த அடிப்படையிலான வளர்ச்சியுடன் நடுத்தரகாலத்தில் 8 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சி வீதத்தினைப் பெறுவதே பத்தாண்டு தொலைநோக்கின் இலக்காகும்.** பல்வேறு பகுதிகளிலும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள், ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் "கிழக்கின் உதயம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் என்பனவற்றின் காரணமாக நடுத்தர காலத்தில் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகம் மேலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது (சிறப்புக் குறிப்பு 2). நடுத்தரகாலத்தில் தனியார்துறை முதலீடுகள் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது உயர் வளர்ச்சிக்கு பக்கபலமாயிருக்கும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு நடுத்தர காலத்தில் 30 சதவீதத்திற்கும் கூடுதலாக உயர்வடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் முதலீடு 24 சதவீதத்தினை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் அரசாங்கத்தின் முதலீடு 8 சதவீதத்திற்கும் கூடுதலாக உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டினையும் ஊக்குவிக்கும் பொருட்டு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை பன்னாட்டு தரங்களுக்கு அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும்.

**கடந்த அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ள வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல், 2007இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கையினால் எடுத்துக் காட்டப்படுகின்றவாறு நடுத்தரகாலத்திலும் இதேபோக்கினை தொடர்ந்தும் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது.** நடுத்தரகாலத்தில், அரசாங்கம் தற்பொழுது அரச - தனியார் பங்குடமையினை ஊக்குவித்து வருவதனாலும் 2008 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தனியார்துறையின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான எண்ணம் என்பனவற்றின் காரணமாக தனியார்துறை அவர்களின் முதலீட்டிற்காக பன்னாட்டு மூலதனச் சந்தையிலிருந்து கூடியளவு மூலதனத்தை திரட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வி உலகளாவிய வளர்ச்சியுடன் சேர்ந்து தொடர்ந்து வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளதுடன் உயர்ந்த வளர்ச்சியை எய்தவும் உதவும்.

**தற்பொழுது இடம் பெற்று வரும் துணை வாடிக்கையாளர் பிரச்சனைகள் மற்றும் கொடுகடன் குறைப்பு காரணமாக, 2008இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி ஏறத்தாழ 4.1 சதவீதத்திற்கு மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் இது நடுத்தரகாலத்தில் மீண்டும் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2007 இறுதியளவில், அரசாங்கம் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து பெற்ற ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.2 பில்லியன்களை செலுத்த வேண்டிய நிதியியல் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. பாரம்பரிய பல்புடை மற்றும் இருபுடை பங்காளர்களுக்கும்

**அட்டவணை 1.5**

**நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு 2007 - 2011 (அ)**

| குறிகாட்டி | அலகுகள் | 2006 | 2007(ஆ) | எறிவுகள் 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ. பில்லியன் | 2,939 | 3,578 | 4,307 | 5,047 | 5,923 | 6,911 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 7.7 | 6.8 | 7.0 | 7.5 | 8.2 | 8.5 |
| பணவீக்க மொ.உ.உ. சுருக்கி | % | 11.3 | 14.0 | 12.5 | 9.0 | 8.5 | 7.5 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ % | 28.0 | 27.9 | 30.0 | 31.5 | 32.5 | 33.2 |
| தனியார் முதலீடு | மொ.உ.உ % | 20.9 | 20.7 | 22.0 | 23.0 | 24.4 | 25.2 |
| அரச முதலீடு | மொ.உ.உ % | 7.1 | 7.2 | 8.0 | 8.5 | 8.1 | 8.0 |
| அதிகரித்த மூலதன வெளியீட்டு விகிதம் | | 3.4 | 4.1 | 4.0 | 4.0 | 3.8 | 3.8 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 17.0 | 17.6 | 20.4 | 22.1 | 23.3 | 24.5 |
| தனியார் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 19.4 | 19.2 | 19.5 | 20.3 | 20.8 | 21.6 |
| அரச சேமிப்புக்கள் | மொ.உ.உ % | -2.4 | -1.6 | 0.9 | 1.8 | 2.5 | 2.9 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ % | 22.3 | 23.4 | 25.7 | 27.4 | 28.5 | 29.5 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐஅடொ.மில் | -3,371 | -3,560 | -3,970 | -4,365 | -4,803 | -5,149 |
| ஏற்றுமதிகள் | ஐஅடொ.மில் | 6,883 | 7,740 | 8,529 | 9,395 | 10,339 | 11,356 |
| இறக்குமதிகள் | ஐஅடொ.மில் | 10,254 | 11,301 | 12,499 | 13,760 | 15,142 | 16,505 |
| பணிகள் | ஐஅடொ.மில் | 257 | 238 | 312 | 370 | 414 | 478 |
| பெறுகைகள் | ஐஅடொ.மில் | 1,625 | 1,712 | 1,938 | 2,156 | 2,364 | 2,592 |
| கொடுப்பனவுகள் | ஐஅடொ.மில் | 1,368 | 1,474 | 1,626 | 1,786 | 1,949 | 2,114 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐஅடொ.மில் | -1,498 | -1,369 | -1,545 | -1,664 | -1,881 | -1,974 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ. | -5.3 | -4.2 | -4.0 | -3.9 | -3.9 | -3.7 |
| மொத்த நிலுவை | ஐஅடொ.மில் | 204 | 531 | 400 | 396 | 388 | 376 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (மாதத்திற்கான இறக்குமதி) | மாதங்கள் | 3.0 | 3.3 | 3.3 | 3.2 | 3.2 | 3.2 |
| படுகடன் பணிவிகிதம் (ஆ) | % | 12.8 | 13.0 | 14.9 | 13.3 | 9.6 | 8.8 |
| **இறைத்துறை (இ)** | | | | | | | |
| வருவாய் | மொ.உ.உ % | 16.3 | 15.8 | 17.4 | 18.0 | 18.5 | 18.5 |
| செலவு | மொ.உ.உ % | 24.3 | 23.5 | 24.2 | 23.9 | 23.7 | 23.3 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -2.4 | -1.6 | 0.9 | 1.8 | 2.5 | 2.9 |
| மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ % | -8.0 | -7.7 | -6.8 | -5.8 | -5.2 | -4.8 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ % | 5.6 | 3.6 | 3.6 | 2.6 | 2.2 | 2.1 |
| **நிதியியல்துறை (ஈ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 21.2 | 10.2 | 15.0 | 15.0 | 14.5 | 14.5 |
| விரிந்த பண வளர்ச்சி (M2b) | % | 17.8 | 16.6 | 15.5 | 15.5 | 15.0 | 15.0 |
| குறுகிய பண வளர்ச்சி (M1) | % | 12.6 | 2.7 | 5.5 | 5.5 | 5.0 | 5.0 |
| தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 24.0 | 19.3 | 17.5 | 17.0 | 16.5 | 16.8 |
| அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 38.8 | 8.9 | -3.1 | -0.7 | -0.7 | -0.7 |

(அ) மார்ச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை
(இ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்களின் சதவிதமாக மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(ஈ) திருத்தியமைக்கப்பட்ட பெயரளவு மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகள் காரணமாக 2008இல் எதிர்வுகூறப்பட்ட இறைத்துறை விகிதமானது 2008 வரவுசெலவுத் திட்டதில் வெளியிடப்பட்ட விகிதத்திலிருந்து வேறுபடுகின்றது.
(உ) ஆண்டின் இறுதிப் பெறுமதிகளில் புள்ளிக்குப்புள்ளி வளர்ச்சி

மூலங்கள் : நிதி திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

புறம்பாக சீனா, இந்தியா மற்றும் ஈரான் போன்ற தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்கள் புதிய அபிவிருத்திப் பங்காளர்களாக மாறியுள்ளன. பல்வேறு செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்து புதிய நிதியியல் கடப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அதேவேளை, நாட்டின் பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகள் அனுமதிக்கப்பட்டிருப்பது என்பனவற்றின் காரணமாக அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நிதிகளை கவர்வதற்கான வழிவகைகள் அதிகரித்திருக்கின்றன. இம்முறிகளின் பெறுகைகளை இணைக்கிணை நிதியத்தினை வழங்குவதற்காகவும் முக்கியமான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காகவும் பயன்படுத்தப் படுவது விரைவான நடைமுறைப்படுத்தலுக்கும் செலவுகளைச் சிக்கனப்படுத்தவும் வழிவகுக்கும்.

**இறைப்பக்கத்தில், நடுத்தரகாலத்தில், அரசிறை மிகையை உருவாக்குவதற்காகவும், அரச செலவினத்தினை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 23 சதவீதத்தில் மட்டுப்படுத்துவதற்கும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 5 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்காகவும் அரசாங்கம் அரசிறையை மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 19 சதவீதத்திற்கு அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது.** வரி அரசிறையை அதிகரித்து வரி ஏய்ப்பினையும் தவிர்ப்பினையும் கட்டுப்படுத்தும் பொருட்டு வரித்தளத்தை விரிவாக்குவதற்கும், வரி நிருவாகத்தினை நவீனப்படுத்தி வலுவூட்டுவதற்கும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கும் தேவையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் தேவை அரசிற்குக் காணப்படுகின்றது. அதேவேளை நடுத்தரகாலத்தில் எறிவு செய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் 2011இல் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினை ஏறத்தாழ 67 சதவீதத்திற்கு குறைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பன்னாட்டுச் சந்தைகளில் உயர்வடைந்து வரும் பண்ட விலைகளைக் கவனத்திற் கொள்கையில் தற்போதைய உயர்மட்டத்திலிருந்து தனியொரு இலக்கத்திற்கு பணவீக்கத்தினை குறைப்பது சவால்மிக்கதாக இருக்கும்.** மத்திய வங்கி அதன் 2008இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டலில் 2008 இறுதியளவில் பணவீக்க வீதத்தினை ஏறத்தாழ 10-11 சதவீதத்திற்கு குறைப்பது பற்றி அறிவித்திருக்கிறது. எனினும், இந்த இலக்கினை எய்துவது உலகப் பொருளாதாரத்தில், குறிப்பாக எண்ணை மற்றும் இன்றியமையாத பண்டங்களின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அசைவுகளின் பல்வேறு நிகழ்வுகளினால் குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது, குறிப்பிட்ட உணவுப் பயிர்கள் சில உயிரின எரிபொருள் உற்பத்திகளுக்கு அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டு வருவதன் விளைவாகத் தோன்றிய உயர்ந்த உணவு விலைகள் உட்பட பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான உயர்வு மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் என்பனவற்றின் பெருமளவு காரணமாக உலகளாவிய ரீதியில் கடுமையான பணவீக்க அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன. இப்பின்னணியில் தொடர்ந்து வரும் உயர்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களைப் பாதிக்காத விதத்தில் உயர்ந்த உள்நாட்டுக் கேள்வியிலிருந்து எழும் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதனை நோக்கி நாணயக் கொள்கை நெறிப்படுத்தப்படும். நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை நோக்கி பயணிக்கும் நோக்குடன் உலகளாவிய நிகழ்வுகளுக்கு இணையாக மத்திய வங்கி நாணய இலக்கிடல் கட்டமைப்பினை மாற்றியமைத்து மேம்படுத்தியிருக்கின்றது (சிறப்புக்குறிப்பு 1).

**பணவீக்கத்தினை நியாயமான மட்டத்திற்கு குறைக்கும் பொருட்டு நாணயக் கொள்கையை மேற்கொள்வதற்கு துணை நிரப்பாக இறைக்கொள்கை வழிமுறைகளும் விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** உயர்ந்ததும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கும் செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்குமாக உறுதியானதும் தாழ்ந்ததுமான பணவீக்கத்தினை எய்துவதனை இலக்காகக் கொண்ட நாணய முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு, அரசாங்கம் முன்மதியுடைய உறுதியான இறை முகாமைத்துவத்தை பின்பற்றுவது இன்றியமையாததாகும். அரசாங்கமும் அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளும் தமது அரசிறைப்பற்றாக்குறையினை நிதியிடுவதற்காக வங்கித்தொழில் முறையிலிருந்து அதிகரித்தளவில் கடன்படுவது தனியார் துறைக்கான முதலீட்டினை இல்லாமல் செய்து நாட்டின் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தினைக் குறைத்து விடுவது மட்டுமன்றி, இக்கடன்பாடுகள் சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப மாற்றமடையாதவையாக இருப்பதனால், நாணய முகாமைத்துவத்தின் காத்திரமான தன்மையினையும் பலயீனப்படுத்தி விடுகின்றன. தற்பொழுது, அரசாங்கத்தின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் ஓய்வூதியம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரம் ஏறக்குறைய 75 சதவீதம் அரசிறையினை ஈர்த்துக் கொள்வதுடன் இன்றியமையாத அரச முதலீடுகள் உட்பட மற்றைய அரச செலவினங்களுக்கு ஒரு சிறிய தொகையை மட்டுமே விட்டு வைக்கப்படுகிறது. அரச பணிகளுக்காக தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு மற்றும் அதிகரித்த அரச கடன்பாடுகள் என்பன சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றைக் கொண்ட உயர்ந்த கொடுப்பனவுகளுடன் சேர்ந்து நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையினை மேலும் உயர்வடையச் செய்யும். அதேவேளை, அரசின் உதவுதொகைச் செலவுகளையும், உதவுதொகையால் தூண்டப்படும் உயர்ந்த செலவினத்தையும் குறைக்கும் பொருட்டு, சமூகத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய தொகுதியினருக்கான போதுமானளவு பாதுகாப்புடன் உயர்வடைகின்ற பன்னாட்டு பண்ட விலைகளை இறுதி நுகர்வோருக்கு படிப்படியாக சுமத்துகின்ற தேவை அரசிற்கு தொடர்ந்து காணப்படுகிறது. ஆகவே அரசாங்கத்தின் இறை உபாயமானது அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவதன் மீதும் அரச வரி அரசிறையை உயர்த்துவதன் மீதும் முக்கியமாக கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். இறை முகாமைத்துவத்தின் எந்தவொரு சாதகமான பெறுபேறும் ஆற்றல் வாய்ந்த நாணய

முகாமைத்துவத்தினை கொண்டு நடத்துவதில் உதவிபுரிந்து நடுத்தர காலத்தில் உயர்ந்த வளர்ச்சிக்கும் தாழ்ந்த பணவீக்கத்திற்கும் வழிவகுக்கும்.

**அரசாங்கத்தின் கடன்பாட்டுச் செலவினை குறைப்பதற்கும படுகடன் முதிர்ச்சிக் காலத்தினை நீடிப்பதற்கும் ஆற்றல் வாய்ந்த பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயமொன்று இன்றியமையாததாகும்.** அண்மைய ஆண்டுகளில், உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களைக் கருத்திற் கொண்டு சந்தை முன்னுரிமைகள் குறுகிய முதிர்ச்சிக் காலங்களுக்கு சார்பாகக் காணப்பட்டமையினால், அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்பாடுகள் பெருமளவிற்கு குறுகிய முதிர்ச்சிகளின் மீதே குவிந்து காணப்பட்டன. இது ஒரே நேரத்தில் பெருந்தொகையான கடன் மீள்கொடுப்பனவுகளுக்கு வழிவகுத்ததுடன், அரசாங்கத்தின் பிணையங்கள் உயர்ந்த வீதத்தில் மீளவழங்குவதற்கும் தேவைப்படுத்தியது. அரச படுகடன் பிணையங்கள் சந்தையினை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டும் அரசாங்கத்தின் கடன்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்காகவும் அரச படுகடன் முகாமைத்துவ உபாயம், சந்தையில் நீண்டகால பிணையங்களை வழங்குவதனூடாக தேவையான நிதிகளை திரட்டுவதன் மீது கூடியளவு கவனத்தை செலுத்துதல் வேண்டும். இதன் மூலம் விளைவு வளைகோடும் அரச காசுப்பாய்ச்சல் முகாமைத்துவமும் மேம்படுத்தப்படுகின்றன. அதேநேரம், அரச பிணையங்கள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வு, வங்கி வைப்புக்களுடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் உயர்ந்த விளைவுகளை வழங்குகின்ற இப்பிணையங்களிலான பொதுமக்கள் முதலீடுகளை அதிகரிக்கத்தக்க விதத்தில் மேலும் உயர்த்தப்படல் வேண்டும்.

**படுகடன் பாய்ச்சல் நாட்டின் எதிர்காலப் படுகடன் சுமையினை அதிகரிக்குமாகையால் நாட்டின் விரிவடைந்து செல்கின்ற சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை அதிக படுகடனல்லா வெளிநாட்டு உட்பாய்ச்சலை உருவாக்குவதன் மூலம் நிரப்புதல் வேண்டும்.** மேலும், முதலீட்டுப் பாய்ச்சல் பொதுவாக நுணுக்கமான தொழில்நுட்பம் முகாமைத்துவ தேர்ச்சி, கடல்கடந்த சந்தையினை அடையும் வாய்ப்புக்கள் என்பனவற்றைக் கொண்டு வருகிறது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் உயர்ந்தளவு குடித்தொகையினைக் கொண்ட இந்தியா மற்றும் பாகித்தானிய சந்தைகளுக்குள் அதிகளவில் நுழையும் தன்மையை வழங்கியமையானது வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கான ஊக்குவிப்புக்களாக அமைகின்றன. கூடுதலான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவரும் பொருட்டு, ஆசியாவின் மிகச் சிறந்த சந்தைகளிலொன்றாக விளங்கும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடுவதற்கு உள்ளூர் கம்பனிகளை ஊக்குவித்தல் வேண்டும். வலுவான வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, வர்த்தகத்தையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினையும் மேம்படுத்துவது இன்றியமையாததாகவுள்ள வேளையில் பன்னாட்டு நியமங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பாரிய செயற்றிட்டங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவித்தல் வேண்டும். இது தொடர்பாக, வரி விடுப்புக்கள் மற்றும் வரி விலக்கல்களை வழங்குவதிலும் பார்க்க, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், வியாபாரத்தினை மேற்கொள்வதன் மீதான வழிமுறைகளைத் தளர்த்துதல், சட்டமுறைகளையும் பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறையும் வலுப்படுத்துதல், அதிகாரமுறைத் தடைகளை அகற்றுதல், சுங்க நடைமுறைகளை இலகுபடுத்தல், உறுதியாக பேரண்ட பொருளாதார சூழலைப் பேணுதல் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பன சிறந்த ஊக்குவிப்புக்களாக தொழிற்படும். அது மட்டுமன்றி அரசாங்கம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏனைய வசதிகளின் மீது கணிசமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளமையினால் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரி விடுப்புக்களும், எண்ணற்ற வரி விலக்கல்களும் அரசின் வரி அரசிறையை உயர்த்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**வலுத்துறையில் காணப்படும் அமைப்பியல் பலயீனம் கடுமையான கரிசனைக்குரியதொன்றாக இருப்பதுடன் நாட்டின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் இலங்கை மின்சாரம் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் இதற்கு எவ்வித தாமதமுமின்றி தீர்வுகாணும் தேவை காணப்படுகின்றது.** இலங்கையில் வலுவின் அலகொன்றிற்கான செலவு இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகள் மற்றும் வர்த்தகப் போட்டி நாடுகள் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் உயர்வாகக் காணப்படுகின்றது. தயாரிப்பு, வேளாண்மைப் பதனிடல், சிறு கைத்தொழில்கள் மற்றும் பணிகள் துறைக் கைத்தொழில்களின் இன்றியமையாத உள்ளீடொன்றாக வலு இருப்பதனால், இக்கைத்தொழில்களின் உறுதியான வளர்ச்சிக்கு நியாயமான செலவில் தடங்கலற்ற வலு வழங்கலை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும். ஏராளமான அமைப்பியல் பலயீனங்களுடன் வலுத்துறை அரசாங்கத்தின் தனியுரிமையாக உள்ளமையானது இலங்கை மின்சபையின் வர்த்தக ஆற்றலின் மீது கரிசனைகளை தோற்றுவிப்பதாகவுள்ளது. தனியார்துறை, சாதகமற்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இலங்கை மின்சபைக்கு வெப்பமின் வலுவினை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றமையானது வலுவின் உருவாக்கச் செலவினை நியாயமான மட்டத்திற்கும் அப்பால் (சிறப்புக்குறிப்பு - 7) அதிகரிக்கின்றது. நியாயமான செலவில் தடங்கலற்ற வலு வழங்கலை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை மின்சபையின் வர்த்தக ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, போட்டி அடிப்படையிலான விலைக் குறிப்பீட்டு பொறிமுறையொன்றின் அடிப்படையில் சரியான முறையில் உருவாக்கப்பட்ட அரச தனியார் பங்குடமை ஒழுங்குகளின் கீழ், தனியார்துறை வலு உருவாக்குனர்களிடமிருந்து மலிவான வலுவினைக் கொள்வனவு செய்வது இலங்கை மின்சபைக்கு அவசியமானதாகும். மேலும், இலங்கை மின்சபையின் வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, அதன் அமைப்பியல் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவதற்கு, புதிய உபாயங்கள் அறிமுகப்படுத்துப்பட்டு நடைமுறைக்கிடப்படுவது அவசியமானதாகும். தேவையான முன்னேற்றங்களை நடைமுறைக்கிடுவதில் காணப்படும் எந்த ஒரு தாமதமும் இலங்கை மின்சாபையின் நிதியியல் ஆற்றலை மேலும்

பலயீனமாக்கி விடுவதுடன், உயர்ந்த தீர்வை, பற்றாக்குறையான மற்றும் நம்பிக்கையற்ற வலு வழங்கல் என்பவற்றினூடாக, அனைத்து கைத்தொழில்களினதும் வளர்ச்சியை தடைசெய்வதன் மூலம் நாட்டின் எதிர்கால வளர்ச்சியின் மீது மோசமான தாக்கத்தினையம் ஏற்படுத்தும்.

**இலங்கை பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியாளனாக இருப்பதனால், உலகளாவிய எண்ணெய் விலைகளில் தொடர்ச்சியாக ஏற்படும் உயர்வுகளிலிருந்து தோன்றும் சவால்களை காத்திரமான முறையில் எதிர்நோக்கி வருகின்றது.** எனினும், எண்ணெய் விலைகள் தாக்குப்பிடிக்கக்கூடிய மட்டத்தினை விஞ்சுமாயின் வெளிநாட்டுத்துறையின் பாதிக்கப்படக்கூடிய தன்மை அதிகரிக்கக்கூடும். 2008இல் எண்ணெய் இறக்குமதிச் செலவு ஐ.அ.டொலர் 3 மில்லியனை விஞ்சுமென எறிவு செய்யப்பட்டு மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 25 சதவீதத்திற்கு வகைகூறுவதுடன், நாடு போதுமானளவு வெளிநாட்டுப் பாய்ச்சலை பெற்றுக் கொண்டாலொழிய இது, சென்மதிநிலுவையில் அழுத்தத்தினை ஏற்படுத்தும் போல் தோன்றுகின்றது. இப்பின்னணியில், வலுவைச் சேமிக்கும் சாதனங்களை அறிமுகப்படுத்தல், எரிபொருள் சிக்கனமற்ற உந்து ஊர்திகளின் இறக்குமதிகளை ஊக்கம் குன்றச் செய்தல், போக்குவரத்து நெரிசலை ஒழுங்குமுறைப்படுத்தல் பன்னாட்டு விலை அதிகரிப்புக்களை இறுதி நுகர்வோர் மீது சுமத்துதல் அரச மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் வலுவையும் உந்து ஊர்திகளையும் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் வலுவினைச் சேமிக்க வேண்டிய அவசியத்தினை பொதுமகளுக்கு உணர்த்துதல் என்பனவற்றினூடாக வலுவினை சிக்கனமாகப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதன் மூலம் எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது உயர்வடைந்து செல்லும் எண்ணெய் விலைகளின் மோசமான தாக்கம் தணிக்கப்படுதவதற்கு உதவும்.

**பெரும்பாலும் அனைத்து முக்கிய நகரங்களிலும் காணப்படும் வினைத்திறனற்ற போக்குவரத்து வசதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசல்கள் என்பன கடுமையான பிரச்சனைகளாக விளங்குவதுடன், குறைவடைந்த உற்பத்தியாக்கத்தினூடாக பொருளாதார வளர்ச்சியின் மீது மோசமான தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது.** உயர்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த ஊர்திகளின் இருப்பு என்பனவற்றிற்கு இணையாக வீதி வலையமைப்பு விரிவடையவில்லை. ஏற்கனவேயுள்ள வீதி வலையமைப்பு சரியான முறையில் பேணப்படாமையானது வீதிகளின் மோசமான தரத்திற்கும் போக்குவரத்து நெரிசலுக்கும் வழிவகுக்கின்றது. பொதுப் பேரூந்து பயணிகள் போக்குவரத்துத் துறையில் தனியார் துறையும் ஈடுபட்டிருந் போதும் கூட பணிகள் முன்னேற்றமடையவில்லை. எண்ணெய் விலைகளிலும் தொழிற்பாட்டு செலவிலும் அதிகிப்புக்கள் காணப்பட்ட போதும், கணிசமான காலமாக பயணக் கட்டமைப்புகள் திருத்தியமைக்கப்படாமையினால், குறைந்த கட்டணங்களின் காரணமாக புகைவண்டித்துறை இன்னமும் இழப்புக்களினால் பாதிக்கப்பட்டு வருகின்றது. மோசமான வீதிகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் என்பன நுகர்வுப் பொருட்களின் உயர்ந்த செலவிற்கு வழியமைப்பதனால் பொருட்களின் போக்குவரத்துச் செலவு உயர்வாகக் காணப்படுகின்றது. இதற்குப் புறம்பாக, போக்குவரத்து நெரிசல், நாட்டிற்குப் பெரும் செலவினை ஏற்படுத்தும் எரிபொருளின் வீண் விரயத்திற்கும் காரணமாகிறது. உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கும், பொருளாதாரத்தின் மொத்தக் காரணி உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கும் உதவுவதற்கு சிறந்த வீதி வலையமைப்புடன் கூடிய வினைத்திறன் மிக்க போக்குவரத்து முறையொன்று அவசியமாகையால் அரசாங்கம் நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுப் பாதை செயற்றிட்டங்களின் நடைமுறைப் படுத்தல்களை வரைவுபடுத்த வேண்டிய அதேவேளையில் அரச போக்குவரத்து முறையினை மேம்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளையும் நடைமுறைக்கிடல் வேண்டும். வீதி வலையமைப்பு மற்றும் போக்குவரத்தில் காணப்படும் மேம்பாடுகள், மாகாணங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதிகரித்த சந்தைகளை அடைவதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிக்கின்ற அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் பங்களிக்கும்.

**2007இன் நான்காம் காலாண்டில் மிகக் குறைந்த சாதனை மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்ட தொழிலின்மையானது தொழிலாளர் உற்பத்தியாக்கம் கணிசமாக மேம்பட்டாலொழிய எதிர்கால உயர்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு தடைகள் இருக்கக்கூடிய தன்மையினை எடுத்துக் காட்டியது.** அண்மைய ஆண்டுகளில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர்ந்த விரிவாக்கம், அரச துறையின் ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புடன் சேர்ந்து தொழிலின்மை வீதம் 2005இன் 7.7 சதவீதத்திலிருந்து 2007 இறுதியில் 6.0 சதவீதத்திற்கு குறைவடைய வழிவகுத்தது. அரச துறைக்கு அவ்வப்போதைய அடிப்படையில் நிகழ்ந்த ஆட்சேர்ப்பும், அரச துறையில் காணப்பட்ட செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொள்ளாத நன்மைகளின் கிடைப்பனவும் தனியார் துறையில் இணைந்து கொள்வதிலிருந்தும் தொழிலற்ற இளைஞர்களை ஊக்கம் குன்றச் செய்ததுமட்டுமன்றி தனியார் துறையில் ஏற்கனவே இணைந்திருந்தவர்களை அரச துறையில் இணைவதற்கு ஊக்குவித்தன. அதிகரித்துச் செல்லும் அரச துறைத் தொழில்நிலை அரச பணிகளில் மேலதிக அலுவலர்கள் காணப்படுவதற்கு வழிவகுப்பது மட்டுமன்றி, உயர்ந்த கீழ் அழைப்பிற்கும் அரசாங்கத்திற்கு உயர்ந்த மீண்டெழும் செலவினத்திற்கும் வழிவகுப்பது மட்டுமன்றி. தனியார் துறையில் தொழிலாளர் பற்றாக்குறையினையும் உருவாக்குகின்றது. எனவே, அரச பணிகளில் தேவையான பதவிகளுக்கு மட்டும் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற காத்திரமான கொள்கையொன்றினை அரசாங்கம் வடிவமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

**தொடர்ச்சியான உயர்வடைந்து செல்லும் உலகளாவிய உணவு விலைகள், வலுவாக வளர்ச்சி காணக்கூடிய அளப்பரிய சந்தர்ப்பங்களை வேளாண்மைத்துறைக்கு வழங்கியிருக்கிறது.** 2007ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டு மற்றும் பெருந்தோட்ட வேளாண்மை இரண்டும் உயர்ந்த விலைகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டதுடன், இப்போக்கு நடுத்தரகாலம் வரை தொடரும் போல்

தோன்றுகின்றது. 2007இல் தேயிலை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியதுடன் இதன் மூலம் தொகை வடிவில் ஏற்றுமதி செய்யப்படுவதிலும் பார்க்க மேலும் பெறுமதி கூட்டப்பட்ட அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்படுவது ஊக்குவிக்கப்பட்டது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பாரிய இந்திய மற்றும் பாகித்தான் சந்தைகளுக்குள் நுழைந்தமையானது, இதன் முழு உள்ளார்ந்த வளத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கு இத்துறைக்கு உதவியது. 2007இல் நெல், தேங்காய் மற்றும் ஏனைய பல வேளாண்மை உற்பத்திகளும் உயர்ந்த விலைகளைப் பெற்றதுடன், இத்தகைய பின்னணியொன்றில் தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்களுக்கான வளமாக்கி உதவுதொகைகளை வழங்குவதிலிருந்து அரசாங்கம் விலகிக் கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, நீர்ப்பாசன வசதிகள், குளங்கள், விரிவாக்க மற்றும் ஆலோசனைப் பணிகள், பின்தங்கிய பிரதேசங்களில் சிறந்த வீதி வலையமைப்பு மற்றும் இத்துறையின் உற்பத்தியாக்க மேம்பாடுகளை உறுதி செய்வதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற வேளாண்மை உட்கட்டமைப்புக்களில் அரசாங்கம் முதலீடு செய்தல் வேண்டும். வேளாண்மையாளர் மற்றும் வர்த்தகர்களுக்கிடையேயான முன்னோக்கிய ஒப்பந்தக் கோட்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் முக்கியமாக வேளாண்மைப் பிரதேசங்களில் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் பிரச்சனைகளை காத்திரமான முறையில் கையாளுதல் என்பன உறுதியான விலையினை (சிறப்புக்குறிப்பு - 11) உறுதிப்படுத்தும். தற்பொழுது வேளாண்மைத்துறை தொழிலாளர் பற்றாக்குறையினை எதிர்நோக்குவதனால் பயிர்ச்செய்கையின் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு பொறிகளை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். ஆகவே, இத்துறையிலுள்ள பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆற்றலும் இயக்கத்தினையும் கொண்ட வேளாண்மைக் கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்துவதும் வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதும் அத்தியாவசிய உணவுப் பொருட்களில் வழங்கலை மேம்படுத்துவதனூடாக வாழ்க்கைச் செலவினை இலகுபடுத்தும்.

**கடலால் சூழப்பட்டிருக்கும் ஒரு தீவாக இலங்கை அதன் மதிப்புமிக்க கடல் வளங்களை இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தாமல் இருந்து வருகிறது.** தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டு வந்த போதும், நாட்டின் மீன்பிடி உற்பத்தி இன்னமும் அதன் உள்ளார்ந்த வளத்திற்கு கீழேயே காணப்படுகின்றது. தனியார் துறையினை உள்ளடக்கிய அரசாங்கத்தின் காத்திரமானதொரு மீன்பிடித்துறை அபிவிருத்தி உபாயமொன்று இத்துறையின் அபிவிருத்திக்கும் அதேபோன்று உயர் உற்பத்தியினை விளைவிப்பதுடன் மீன் உற்பத்தியின் ஏற்றுமதிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை உழைத்துக் கொள்ளவும் வழிவகுக்கும். அத்தகைய உபாயம் கடலினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் கூடிய தொழில் வாய்ப்புக்கள், குறிப்பாக மீன்பிடிச் சமூகத்திலுள்ள இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் எதிர்காலத்தில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும் இத்துறைக்கான அபிவிருத்தி உபாயங்கள் அரசாங்கத்தின் பங்களிப்புடன் இத்துறையின் உள்நாட்டு பெறுமதி கூட்டல்களை அதிகரிக்கும் விதத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் இருவரையும் ஈடுபடுத்தும் விதத்தில் அமைந்திருப்பது முக்கியமானதாகும் (சிறப்புக்குறிப்பு - 6).

**மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் 2007இல் தொடங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினால் பெறப்பட்ட நில அதிர்வு தரவுகளின் பகுப்பாய்வானது, மன்னார் வளைகுடாவின் அளவீடு செய்யப்பட்ட பிரதேசத்தில் குறிப்பிடத்தக்களவு கைட்ரோ காபன் (எண்ணெய்/வாயு) காணப்படுவதனைக் காட்டுவதாகவுள்ளது.** எல்லை பிரிக்கப்பட்டுள்ள எட்டுத் துண்டுகளிலே இரண்டு துண்டுகள் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் எண்ணை அகழ்விற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள வேளையில், பெற்றோலிய மூலவள அபிவிருத்திக் குழு மூன்று துண்டுகளுக்கான அகழ்வு உரிமங்களின் பொருட்டு பன்னாட்டு போட்டி விலைக்குறிப்பீடுகளைக் கோரியுள்ளதுடன் அந்த விலைக் குறிப்பீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. பெற்றோலிய மூலவளங்கள் வெற்றிகரமாக கண்டறியப்படுமாயின், நாட்டின் மிக மதிப்புமிக்க இலங்கை மூலவளமாக விளங்குமென்பதுடன் குறிப்பிடத்தக்கதொரு வர்த்தகப் பெறுமதியினையும் கொண்டிருக்கும். பெற்றோலிய மூலவளங்களின் அகழ்வு, உற்பத்தி என்பன நிபுணத்துவ ரீதியிலும் முன்மதியுடனும் முகாமைப்படுத்தப்படுமாயின் இது முக்கிய பொருளாதார சமூக நன்மைகளை நாட்டிற்கு ஏற்படுத்தும். எனவே, வலுவானதொரு முறையில் நாட்டிற்கான நன்மைகளை உச்சமயப்படுத்துவது, பெற்றோலிய மூலவள அபிவிருத்தி தொடர்பான முழுச் செயற்பாட்டிலும் மிக முன்னுரிமை வாய்ந்ததொன்றாக இருத்தல் வேண்டும். இது தொடர்பாக, காத்திரமான சந்தைப்படுத்தலும் அதனுடன் கவர்ச்சிகரமான நம்பிக்கையான முதலீட்டாளர், வெளிப்படையானதும் பொறுப்புக் கூற வேண்டியதுமான தன்மையினைப் பேணுதல், உறுதியான நீண்டகால கொள்கைகளையும் உபாயங்களையும் வடிவமைத்தல், காத்திரமான நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துதல், தரவ முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வுகளை வலுப்படுத்துதல், முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு போன்றன வெற்றிகரமான பெற்றோலிய மூலவள ஆய்வுகளுக்கு மிக முக்கியமானவைகளாகும். அதேநேரம், கைட்ரோ காபன் மூலவளங்கள் இருப்பதாக நிரூபிக்கப்பட்ட பிரதேசங்கள் எனக் கருதப்படுகின்ற காவேரி படுக்கை உட்பட இலங்கையின் மற்றைய கரையோரங்களிலும் பெற்றோலிய மூலவளங்களின் அகழ்வுகளுக்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும்

## சிறப்புக் குறிப்பு 3

## மன்னார் படுக்கையில் எண்ணெய் அகழ்வு

1967இல் வடமேல் பிராந்தியத்தில் கரைக்கு அப்பாலிருந்து கிடைத்த நில அதிர்வு தரவுகள் முதலில் பெறப்பட்டதுடன், 1960 இலங்கையின் எண்ணெய் அகழ்வு முயற்சிகள் ஆரம்பமாயின. அதன் பின்னர் 1974இற்கும் 1981இற்குமிடையில் ருசியா மற்றும் அமெரிக்கக் கம்பனிகளின் உதவியுடன் ஏழு அகழ்வுக் கிணறுகள் (3 கரையிலும் 4 கரையோரத்திற்கு அப்பால் ஆழமற்ற நீரிலும்) தோண்டப்பட்டன. ஹைட்ரோ காபன் படிவுகள் காணப்படுவதற்கான சான்றுகள் கிடைத்த போதும், படிவுகளின் ஆழம் மற்றும் அக்கால கட்டத்தில் கிடைக்கத்தக்கதாக இருந்த தொழில் நுட்பம் என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் இவை வர்த்தக ஆற்றல் அற்றவை எனக் கூறப்பட்டதால் எண்ணெய் அகழ்வு தொடர்பாக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நீண்டகால அர்ப்பணிப்புடன் கூடிய நிலையான கொள்கைகளும் பொருத்தமான நிறுவன ரீதியாக கட்டமைப்பும் இன்மையானது எண்ணெய் அகழ்வு தொடர்பான முதல் முயற்சி கைவிடப்பட வழிவகுத்தது.

இலங்கை அரசாங்கத்திற்கும் நோர்வே எண்ணெய் கம்பனிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக 2001 (கட்டம் 1)இலும் 2005 (கட்டம் 2)இலும் மன்னார் படுக்கைகள் 2-டி - நில அதிர்வு ஆய்வுகள் செய்யப்பட்டமையுடன் அண்மைக்கால அகழ்வாராய்ச்சிகள் தொடங்கின. இந்த நில அதிர்வு அளவீடுகள் இலங்கையின் மேற்கு கரையோரத்திலிருந்து தொடங்கி அதன் கிழக்கு இந்தியக் கடல் எல்லை வரையான பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது. ஆய்வுப் பிரதேசத்தின் கடல் ஆழம் 50 - 3000 மீற்றர் வரையில் அமைந்திருந்தது. அதன் பின்னர் 2006இல் நில அதிர்வுத் தரவுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், இத்தரவுகளின் பகுப்பாய்வுகள் அளவீடு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு ஹைட்ரோ காபன் (எண்ணெய்/ வாயு) காணப்படுவதனைக் காட்டின. விபரமாக ஆராயப்படாவிட்டாலும், நாட்டின் காவேரிப் படுக்கையிலும் நாட்டின் கரையோரத்திற்கு அப்பாலும் ஹைட்ரோ காபன்களின் உள்ளார்ந்த வளம் அதிகளவில் இருப்பதாக நம்பப்படுகிறது. 2002இல் சுவீடன் நிறுவனமொன்றினால் செய்மதி புவியீர்ப்பு விசை அளவீடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

பெற்றோலிய அகழ்வின் முழுமையான கொள்ளளவினை உருவாக்கும் நிறுவனமாக பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு செயற்படுகின்றது. 2003ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டம் சட்ட அமைப்பினை வழங்குகின்றது. சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்திக் குழு தொடர்பான அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கியுள்ளதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ளது. பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்திற்கு பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தலைமை தாங்குவதுடன் பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவிற்கு உதவியும் வழங்குகின்றது.

மன்னார் படுக்கையில் 2-டி நில அதிர்வு ஆய்வு 33,715 சதுர கிலோமீற்றர்களை உள்ளடக்கியுள்ளதுடன் அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு இது 8 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இத்துண்டுகளில் இரண்டு அதாவது துண்டு 1, துண்டு 8 என்பன முறையே இந்தியாவிற்கும் சீனாவிற்கும் அகழ்விற்காக நியமன அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன. 2007 ஓகத்து தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பகிரங்க விளக்கங்கள், கலந்துரையாடல்கள் என்பனவற்றை மேற்கொண்ட பின்னர் பெற்றோலிய மூலவள அபிவிருத்தி செயலகம் எஞ்சிய 6 துண்டுகளில் 3 துண்டுகள் தொடர்பாக (துண்டு இல. 2, 3 மற்றும் 4) அகழ்வு உரிமங்களுக்காக பன்னாட்டு போட்டி விலைக் குறிப்பீடுகளைக் கோரியிருக்கிறது.

பெற்றோலிய மூலவளங்கள் வெற்றிகரமாக

### அட்டவணை சி.கு. 3.1
### மன்னார் படுக்கை அனுமதிப்பத்திர சுற்று 1 - துண்டுகளின் விபரங்கள்


| துண்டுகள் | பரப்பளவு (சதுர கி.மீ.) | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | 3,501 | ஒதுக்கப்பட்டுள்ளது |
| 2 | 3,338 | ஏலம் கோரப்பட்டுள்ளது |
| 3 | 3,572 | ஏலம் கோரப்பட்டுள்ளது |
| 4 | 4,127 | ஏலம் கோரப்பட்டுள்ளது |
| 5 | 6,644 | |
| 6 | 3,567 | |
| 7 | 3,970 | |
| 8 | 4,995 | ஒதுக்கப்பட்டுள்ளது |
| மொத்தம் | 33,714 | |
| துண்டு 1, 8 நீங்கலாக | 25,218 | |

மூலம் : பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

கண்டறியப்படுமாயின், நாட்டின் மிக மதிப்புமிக்க இயற்கை வளமாக விளங்குமென்பதுடன் குறிப்பிடத்தக்க வர்த்தகப் பெறுமதியினையும் கொண்டிருக்கும். பெற்றோலிய மூலவளங்களின் அகழ்வு, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி என்பன நிபுணத்துவ ரீதியிலும் முன்மதியுடனும் முகாமைப்படுத்தப்படுமாயின் இது முக்கிய பொருளாதார சமூக நன்மைகளை நாட்டிற்கு ஏற்படுத்தும். எனவே, வலுவானதொரு முறையில் நாட்டிற்கான நன்மைகளை உச்சமயப்படுத்துவது, பெற்றோலிய மூலவள அபிவிருத்தி தொடர்பான முழுச் செயற்பாட்டிலும் மிக முன்னுரிமை வாய்ந்ததொன்றாக இருத்தல் வேண்டும். சில நாடுகள் பெற்றோலிய வளங்களை எச்சரிக்கையுடன் அபிவிருத்தி செய்ய முடியாமலிருப்பதனால், வளங்கள் அபிவிருத்தியுடான செயற்றிறன்மிக்க நன்மையை பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இது தொடர்பாக, காத்திரமான சந்தைப்படுத்தல், கவர்ச்சிகமான நம்பிக்கையான முதலீட்டாளர், வெளிப்படையானதும் பொறுப்புக் கூற வேண்டியதுமான தன்மையினைப் பேணுதல், உறுதியான நீண்டகால கொள்கைகளையும் உபாயங்களையும் வடிவமைத்தல், காத்திரமான நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துதல் தரவு முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வுகளை வலுப்படுத்துதல், காத்திரமான ஒழுங்குவிதிகள், முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு போன்றன வெற்றிகரமான பெற்றோலிய மூலவள வெற்றிகர ஆய்வுகளுக்கு மிக முக்கியமானவைகளாகும்.


சி. குறிப்பு தொடர்ச்சி

**வரைபடம் - சி.கு. 3.1**
**மன்னார் படுக்கை**




மூலம் : பெற்றோலியம், பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் - சி.கு. 3.2**
**மன்னார் படுக்கை துண்டுகளுக்கான உரிமம் வழங்கல்**



மூலம் : பெற்றோலியம், பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு

நில அதிர்வு அளவீட்டில் காட்டப்பட்டவாறு மன்னார் படுக்கையில் கைட்ரோ காபன் படிவுகள் ஆழ் கடலிலும் (400 - 1,500 மீற்றர்) அப்பாற்பட்ட ஆழ் கடலிலும் (1,500 மீற்றர்களுக்கு மேல்) எதிர்பார்க்கப்படுவதானது எண்ணெ் அகழ்வுகளை மிக இடர்பானதாகவும் செலவுமிக்கதாகவும் எதிர்பார்க்கின்றது. மதிப்பீடுகளின்படி ஆழ்கடலில் கிணறொன்றைத் தோண்டுவதற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 60 மில்லியன் செலவாகும். பொதுவாக எண்ணெய் இருப்பதாக நிரூபிக்கப்பட்ட வயல்களில் கூட எண்ணெய் அகழ்வு, அபிவிருத்தி மற்றும் உற்பத்திக்காக ஏறத்தாழ 7 - 8 ஆண்டுகள் எடுக்கும். அதேநேரம், உலக சந்தையின் உயர்ந்த எண்ணெய் விலைகளை கவனத்தில் கொண்டு பல நாடுகள் எண்ணெய் அகழ்விற்காக புதிய வயல்களைத் திறந்துள்ளதுடன் முதலீட்டாளர்களைக் கவர்வதற்காகப் பல்வேறு ஊக்குவிப்புக்களையும் அறிமுகப்படுத்தியுள்ளன. எனவே, மன்னார் படுக்கை கன்னி வயலாக இருப்பதனால் இலங்கை சந்தைப்படுத்தல் மற்றும் நல்ல முதலீட்டாளர்களைக் கவருவதில். கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும். புகழ் பெற்ற முதலீட்டாளர்களைக் கவர்வதில் இறை ஊக்குவிப்புக்களுக்குப் புறம்பாக நம்பகத்தன்மையினை பேணுதல், வெளிப்படையான தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை என்பன இன்றியமையாதனவாக இருத்தல் வேண்டும்.

கொள்கை வடிவமைப்பு, முகாமைத்துவம், எண்ணெய் அகழ்வின் மேற்பார்வை, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி எண்பனவற்றிற்காக நன்கு அமைக்கப்பட்ட நிறுவன ரீதியான ஒழுங்குமுறையொன்று இருத்தல் வேண்டும். இது தொடர்பாக நீண்ட காலத்தில் இயக்கவாற்றலும் வலுவான நிலையும் கொண்ட ஒரு கைத்தொழிலாக மாறுவதற்கு பேரண்ட மட்டத்தில் எண்ணெய் அகழ்விற்கான வழிகாட்டலுக்காக கொள்கைகளை வகுப்பதற்கு உயர்ந்த இயலளவு கொண்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்கு, சபையொன்று தேவையாக இருக்கும். எண்ணெய் அகழ்வின் உயர்ந்த தேசிய முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு, அத்தகைய நிறுவனங்களுக்கு எண்ணெய் அகழ்வில் பெற்றுக் கொண்ட நாடுகளில் நாட்டின் தலைவரே தலைமை வகிப்பவராக இருக்கின்றார்.

புவிச்சரிதவியல், புவிப் பௌதீகம், வலுப் பொருளாதாரம் மற்றும் இடர்நேர்வு பகுப்பாய்வு போன்ற எண்ணெய் அகழ்வுதுறைகள் அனைத்திற்கும் மனித வளங்களைத் திரட்டுவதும் வலுப்படுத்துவதும் தேவையாகவுள்ளதுடன் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதும் மிக முக்கியமானதாகவுள்ளது. அதேநேரம், எண்ணெய் அகழ்வு தொடங்கியதும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கும் புதிய கேள்வி ஏற்படுவதுடன், அதேபோன்று எண்ணெய் கைத்தொழிலுக்கான தொழிலாளர் தேவையானது பொருளாதார நடவடிக்கைகளில் வலுவான முன்னேற்றங்களையும் பின்புல இணைப்புக்களையும் உருவாக்குகின்றது. புதிய கேள்வியானது வங்கித்தொழில் காப்புறுதி, கட்டுமானம், போக்குவரத்து, பொது வசதிகள், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புடன் தொடர்பான பணிகள் துறைகளில் ஏற்படும்.

எனவே, எண்ணெய் அகழ்வின் தேசிய முக்கியத்துவத்தையும், உலக சந்தையில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளையும் கருத்திற் கொள்கையில் முதலீடுகளை ஊக்குவித்து எண்ணெய் அகழ்வினை சாத்தியமானளவிற்கு விரைவாக தொடங்குவதற்கு அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். முன்மதியுடன் கூடிய வியாபாரச் சூழலொன்றினை ஏற்படுத்துவதுடன் ஆரோக்கியமான போட்டியொன்றினையும் உருவாக்குவது நாட்டிற்கான உயர்ந்து பட்ச நன்மைகளை உறுதிப்படுத்துவதாக இருக்கும். தீர்மானமெடுக்கும் செயற்பாட்டில் நீண்ட கால திட்டமிடலும் நம்பகத்தன்மையினைப் பேணுதல், வெளிப்படை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றைப் பேணுவது முதலீடுகளைக் கவர்வதில் முக்கிய பங்கினை வகிக்கும். அதேநேரம் கைட்ரோ காபன் இருப்பதாக நிரூபிக்கப்பட்டதாக கருதப்படும் காவேரிப் படுக்கை உட்பட இலங்கையின் கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய பிரதேசங்களில் பெற்றோலிய மூலவளங்களை கண்டறிய முயற்சிகளைத் தொடங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.